ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கண்டேன் கமலமலர்ப்பாதம்

(கோயில் திருவாய்மொழி - பாகம் ஒன்று - பக்தி சரணாகதி)

நம்மாழ்வார் - காஞ்சீபுரம்

முனைவர் டி.எஸ். ராமஸ்வாமி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

கண்டேன் கமல மலர்ப்பாதம்

(கோயில் திருவாய்மொழி – பாகம் ஒன்று)

முனைவர் **டி.எஸ். ராமஸ்வாமி**

உரிமைகள் யாவும்
ஆசிரியருக்கே
முதல் பதிப்பு 2009

Reprint - 2016

copies - 200

விலை : ரூ. 60/-

புத்தகம் கிடைக்குமிடம் :

முனைவர் டி.எஸ். ராமஸ்வாமி

36 தேர் வீதி, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
☎ 044 - 2844 2526 / 94444 53270
E-mail : tsrchennai@yahoo.com

அச்சிட்டோர் :

ஆர்என்ஆர் பிரிண்டர்ஸ்

நெ.19, தாண்டவராயன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
☎ 2844 1856

Sri :
Srimathe Ramanujaya Nama:

SRI VANAMAMALAI MUTT
NANGUNERI - 627 108.

Srimath Paramahamsa Jagadguru
Sri Kaliyan Vanamamalai Ramanuja Jeer Swami

E.mail : varamangai2001@yahoo.com
Fax : 04635 - 250636
Ph. : 04635 - 250159 (Personal)
: 04635 - 250119 (Office)

பேரன்புமிக்க பெரியோர்களே! ஆத்திகப்பெருமக்களே! **"கண்டேன் கமலமலர்ப் பாதம்"** என்ற தலைப்புக்கொண்ட அண்மையில் வெளியிடப்போகின்ற நமது அருமையான நூலினை, நமது மிகமிக நெருங்கிய ஆன்மீக நண்பர் **ஸ்ரீஉ.வே. முனைவர் T.S. ராமஸ்வாமி அய்யங்கார்** நம்மிடம் ஒரிரு தினங்கட்கு முன்னர் கொணர்ந்து தந்தார். நமது கருத்தையும், மங்களாசாஸனத்தையும் வேண்டினார். நாமும் முழுவதும் படித்துப் பார்க்க அவகாசமில்லா விடிலும், சில பல பக்கங்களைப் புரட்டி பார்த்து படித்தோம். நம்பிக்கையற்ற, நம்பிக்கை விளைத்துக் கொள்ள மறுக்கும் மனிதர்கட்கு நம்பிக்கை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஆணித்தரமாய், உறுதிபட எழுதியுள்ளமை பாராட்டுற்குரியது. ஆசிரியர் வாதிட்டு விஷயங்களை நிலைநாட்டும் சிறந்த வழக்குரைஞராயிற்றே. யாவரும், விசேடமாக இன்றைய இளையவர்கள் படித்துப்பயன் பெறவேணும். எமது மனம் நிறைந்த மங்களாசாஸனங்கள் நூலாசிரியர்க்கும் படித்துப் பயனடையப் போகும் யாவர்க்கும் நலமே விளைக; எம்பிரான் அருள்க;

சுபம்.

ஸ்ரீராமானுஜன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பரமஹம்ஸ அப்பன் பரகால ராமாநுஜ எம்பார் ஜீயர் ஸ்வாமி

தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர் : ஸ்ரீ எம்பார் ஜீயர் மடம்

30, மணவாளமாமுனி கோயில் வீதி, ஸ்ரீபெரும்பூதூர் - 602 105. காஞ்சிபுரம் மாவட்டம்.

தொலைபேசி : 27162073 செல் : 9994323397

"ஆயிரம் இன் தமிழ்ப் பாடினான் அருள் கண்டீர்
இவ்வுலகினில் மிக்கதே"–

"மதுரகவி சொன்ன சொல் நம்புவார் பதி, வைகுந்தம் காண்மினே."

மிக்க இறைநிலை மெய்யாம் உயிர்நிலை, தக்கநெறி, தடையாகித் தொக்கியலும் ஊழ்வினை, வாழ்வு இவ்வைந்துமே மனிதனின் ஆன்ம நன்மைக்கு அறியவேண்டிய இன்றியமையாத செம்பொருள்கள்.

ஸநாதன வேதத்தின் உட்பொருள் இவையே. நம் நெஞ்சில் இவற்றை நிற்கப் பாடியவர் நம்மாழ்வார்.

வடமொழி வேதத்துக்கு ஈடாக வேதத்தின் சுவைப் பயனைத் தென்மொழி மறையாக வெளியிட்ட திராவிட ஆன்மீகப் பெரியார் அவரே.

பத்துப்பத்தாக நூறு பதிகங்களில் அமைந்த அந்தாதிப் பாசுரம் ஆயிரமும் தமிழ்மொழியின் ஈடு இணையற்ற மணிமகுடமாகும். வழிநூல் பல கண்டு, மானிட இனத்துக்கு மண்மிசை பெருவாழ்வு அளித்து, வானுறையும் தெய்வத்துள், மனிதனை ஏற்றிவைக்கும் வாய்மை நூல் திருவாய்மொழி. இதுவே திராவிட வேதாந்தம்!

உலகம் உய்ய ஒரேவழி திருவாய்மொழி!

இதனை நன்கு உணர்ந்த நம் உடையவர் பகவத் ராமாநுஜர், நாதமுனி முதலான தம் பூருவாசிரியர்களின் அடியொற்றி மாறன் சடகோபன் நம்மாழ்வாரின் அடிபணிந்து உய்ந்தவர்; தாம் உய்ந்தது மட்டுமன்றி, "உலகோர் உய்ய ஒரேவழி உடையவர் திருவடி" என்னும்படி உயர்நிலை எய்தினார்.

“சொல்லார் தமிழொரு மூன்றும், சுருதிகள் நான்கும் எல்லை இல்லா அறநெறி யாவும் தெரிந்தவன், எண்ணருஞ்சீர் நல்லார் பரவும் இராமாநுசன்” – (அமுதானார்)

இறைவனுக்கும் நமக்கும் உள்ள இடையறாத உறவின் உணர்வினை ஊட்டும் திருவாய்மொழியின் உரைநூல்கள் பல. முன்னோர் மொழிந்த முறை அறிந்து, இப்போது வழக்கறிஞர், தின்னலூர் ஆசூரி ராமஸ்வாமி ஐயங்கார் திருவாய்மொழி விளக்க நூல் ஒன்று யாத்துள்ளார்.

‘பூருவாசாரியர்கள் போதம், அநுட்டானம்’ இவை உணர்ந்து அமைந்துள்ள இந்நூல், உச்சிமேல் வைத்து மெச்சத்தக்கதாய் உள்ளது!

நீதிமன்றத்தில் வழக்காடும் திறன் பெற்றவர் ஆன்மீகத் துறையிலும் ஈடுபாடு கொண்டு, மக்களைப் பெருமக்கள் ஆக்கும் பணியில் முனைந்திருப்பது வரவேற்றுப் பாரட்டுதற்கு உற்றது.

இவர் இப்போது மேற்கொண்டுள்ள முதல் இரு திருவாய்மொழி பதிக விளக்கம் ஏற்கெனவே நம் முன்னோர் “ஸ்ரீபாஷ்ய த்ராவிடாகமாத்ய தசக த்வந்த்வ ஐககண்ட்யம்” என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள நூலைப் போன்றது அல்ல. அந்நூல் பகவத ராமாநுஜரின் ஸ்ரீபாஷ்யம், நம்மாழ்வாரின் முதலிருதிருவாய்மொழி, இவ்விரண்டின் ஒப்புமையை விளக்குவது.

ஆனால் முனைவர் இராமஸ்வாமியின் இந்நூல் முதல் பதிகத்தில் நம்மாழ்வாரின் தனி அனுபவமும், இரண்டாம் பதிகம் மற்றவர்க்கு ஆழ்வாரின் உபதேசமுமாய் இவ்விருவகையில் அமைந்துள்ள பாசுரச் சிறப்புகளை முன்னோர் உரைநூல்களின் கருத்தை இக்காலத்தவர்க்கு புரியவைக்கும் வகையில் விளக்கியுள்ளார். ஆசிரியரின் எழுத்தாற்றலும் பக்தியுணர்வும் நடுநிலை வாதத்திறனும் இதில் நன்கு வெளிப்படுகிறது.

விரிவு ஏன்? நூலை வாங்கிப் படியுங்கள். உங்களுக்கே புரியும். புகழல்ல இது, உண்மை.

முனைவர் முயற்சிகள் சிறந்து மிக்கு ஓங்குக! பொலிக! பொலிக!

நித்யஸ்ரீ: நித்ய மங்களம்.

அப்பன் பரகால ராமாநுஜ
எம்பார் ஜீயர்

Dr. M.A. வேங்கடகிருஷ்ணன்,
M.A.,M.Phil.,Ph.D.,D.Litt.

தலைமைப் பேராசிரியர், வைணவத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை – 600 005.
தொலைபேசி: 2539 9817

ஆசிரியர் : **கீதாசார்யன்,**

7, தெற்குமாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி: 2844 16 53

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத்வரவரமுனயே நம:

முனைவர் டி.எஸ்.ராமஸ்வாமி அவர்கள் அடியேனிடம் நெடுநாள்களாகவே அன்புடையவர். மூத்த வழக்குரைஞராக அவர் பணியாற்றி வந்தாலும், அப்பணியிலிருந்து தற்காலிக ஓய்வு எடுத்துக்கொண்டு வைணவத்தில் எம்.ஏ. பட்டம் பெறவேண்டும் என்று தம்முடைய முதிய வயதையும் பொருட்படுத்தாமல் மிக ஆர்வத்துடன் படித்து எம்.ஏ. பட்டமும் பெற்றார். அதற்குப் பிறகு அவர் முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டபோது அவருக்கு அடியேன் மேற்பார்வையாளராக இருக்கும் வாய்ப்பைப் பெற்றேன். ‘கோயில் வழக்குகளும் நீதிமன்றத் தீர்வுகளும்’ என்ற மிக அரிய தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றார். ஏற்கெனவே அவர் எழுத்தாளராக இருப்பதோடு மட்டுமல்லாமல் சில பல நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ளார். அந்த வரிசையில் ‘கண்டேன் கமலமலர்ப்பாதம்’ என்ற தலைப்பில் திருவாய்மொழியின் முதல் இரண்டு பதிகங்களுக்கு மிக எளிய நடையில் விளக்கம் எழுதியுள்ளார்.

இந்நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையே மிகவும் சுவையாக அமைந்துள்ளது. சமயநூல்கள் எவையுமே புரிவதில்லை

என்று கூறுபவர்களை மறுக்கும்விதமாக, கம்ப்யூட்டர், எஞ்சினிரிங், மருத்துவம், சட்டப்படிப்பு முதலிய எதுவும் முதலில் புரியாதுதான். நிறையப் பணம் வரும் என்று நம்புவதால் எல்லாமே படித்துப் புரிந்துகொள்கிறார்கள். அதுபோலவே சமய இலக்கியங்களும் முதலில் புரியாததுபோல் இருந்தாலும், நிச்சயம் நமக்கு நன்மை தரும் என்ற நம்பிக்கையுடன் படித்தால் புரிந்துகொள்ளலாம் என்ற கருத்தில் அவர் எழுதியுள்ள வரிகள் மிகவும் ஆணித்தரமாக அமைந்துள்ளன.

முன்னுரையைத் தொடர்ந்து திருவாய்மொழியின் முதல் இரண்டு பதிகங்களுக்கு மிகவும் எளிய நடையில் விளக்கங்களை எழுதியுள்ளார். பெரும்பாலும் நம்பிள்ளை முதலிய பூர்வாசார்யர் களுடைய வியாக்கியானங்களின் அடிப்படையிலேயே இவருடைய விளக்கமும் அமைந்துள்ளது என்றாலும் தற்காலத்தவர்களும் விரும்பிப் படிக்க வேண்டும் என்பதற்காக நிகழ்கால நடையில் பல புதிய செய்திகளுடன் அழகியமுறையில் விளக்கங்களை எழுதியுள்ளார்.

இதேபோல் மேலும் மேலும் பல நூல்களை எழுதும் வகையில் அவருக்கு நீண்ட ஆயுள் ஆரோக்யம் முதலியவற்றை வழங்கவேண்டும் என்று கீதாசார்யன் திருவடிகளில் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

அன்பன்

வேங்கடகிருஷ்ணதாஸன்

அணிந்துரை

K.B.தேவராஜன்

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார் பகவான் தந்த அனுபவத்தை உட்கொண்டு அவ்வனுபவம் உள்ளடங்காமையால் வெளிப்புறப்பட்டவையே நான்குவேத ஸாரமான நான்கு ப்ரபந்தங்களாக மலர்ந்தன. அவற்றில் திருவாய்மொழி ஸாமவேத ஸாரம் என்று குலாவப்படுகிறது. இதில் முதல் இரண்டு திருவாய்மொழிகளான 'உயர்வறவும் வீடுமின்' ஸ்ரீபாஷ்யத்தின் அர்த்தங்களை விவரிக்கின்றன என்பது நம் முன்னோர்களின் நிரூபணம். இவ்விரண்டு திருவாய்மொழிகளின் ஸாரத்தையும் உள்ளடக்கி ஈடுவ்யாக்யானத்தைத் தழுவி ஸ்ரீ உ.வே.Dr.T.S.ராமஸ்வாமி ஐயங்கார் (அட்வகேட்) 'கண்டேன் கமல மலர்ப்பாதம்' என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டுள்ளார். ஈட்டில் வெளியிடப்பெற்ற அர்த்தங்களைச் சுவை குன்றாமலும், மதிப்புக் குறையாமலும், எளிய தமிழில் வெளியிட்ட பாங்கினை எண்ணியெண்ணி வியக்கின்றேன். ஒத்த கருத்துள்ள மேனாட்டறிஞர்களின் சொற்றொடர்களையும், தேவைக்கேற்ப ஆங்கிலச் சொற்களின் பயன்பாடும் நூலுக்கு மெருகூட்டுகின்றன. தகுந்த இடங்களில் ஆழ்வாரின் கூற்றுக்கேற்பத் தன் அனுபவத்தையும் இணைத்துத் தத்துவ நெறிகளை அறிவுறுத்தும் பாங்கு அழகுடன் மிளிர்கிறது.

'வண்புகழ் நாரண' என்ற இடத்தில் ஆழ்வார் ஐதிஹ்யத்தையும் திருமந்த்ரார்த்தத்தை முமுக்ஷுப்படி நூலின் அடிப்படையில் சுருக்கி வரைந்திருப்பது படித்து உணரத் தக்கதாகும்.

இவ்வண்ணமே ஸ்ரீஸ்வாமியின் மேலும் பல நூல்கள் வெளிவர வேண்டும் என்று பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளில் இறைஞ்சி அமைகிறேன்.

முன்னுரை

எம்பெருமான் திருவருளாலேதான் எல்லாமே இயங்குகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

"மோக்ஷம் அடையவேண்டும், மறுபிறவி கூடாது" என்கிற ஒரே ஆசையுடன், உலக விஷயங்களில் விரக்தி கொண்டு, இறைவன் திருவடிகளே கதி என்றே வாழ வேண்டும். இதுவும் தெரியும்.

ஆயினும், எண்ணிலடங்கா ஆசைகள் மண்டிக் கிடக்கின்றதால், ஏதோ கொஞ்சம் படித்தும் கேட்டும் அறிந்து கொண்டவற்றை, அல்லது, அறிந்து கொண்டுவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கும் சிலவற்றை, ஓர் புத்தகமாக வெளியிட்டால் சிலராவது படித்துப் பயனடைவார்கள் என்று அடியேனுக்கு ஓர் நப்பாசை, அசட்டுக் கற்பனை; ஆகவே எழுதத் துணிந்தேன்.

வேதங்கள், தர்மசாஸ்திரம், இதிகாச புராணங்கள் அருளிச் செயல்கள் எனப்படும் நாலாயிர திவ்யப்ரபந்தம், பூர்வாசார்யர்களின் வியாக்யானங்கள், பல க்ரந்தங்கள், எளிமையாக எழுதப்பட்டு வெளிவந்திருக்கும் ஆயிரக்கணக்கான நூல்கள், சிறந்த வித்வான்களின் காலட்சேபங்கள், உபன்யாஸங்கள், ஆகிய பலப்பல பொக்கிஷங்கள் வெகு அருகில் இருந்தும், அவைகளை எல்லாம் தள்ளி விட்டு, எங்கோ எதையோ தேடித்தேடி அலைந்து திரிகிறார்களே, நம் உறவினர்களும், நண்பர்களும், ஏனைய மக்கள் கூட்டமும், ஏன்?ஏன்?ஏன்?

"இவைகளிலே சுவை இல்லை, மகிழ்ச்சியில்லை, பலனில்லை" என்கிறார்கள்.

"எப்படித் தெரியும்? முயற்சி செய்தீர்களா?" என்று கேட்டேன்.

"நீங்கள் சொன்ன வேத சாஸ்திரங்கள், திவ்யப்ரபந்தம், காலட்சேபம் முதலியன எதுவுமே எங்களுக்குப் புரியவில்லை, புரியவில்லை புரியவில்லை".

ஏன் புரியவில்லை?

எம்பெருமானை முழுமையாக நம்ப வேண்டும்; அப்போதுதான் அவனைப் பற்றிய அறியாமையை நீக்கி எல்லா உண்மைகளையும் புரிந்து, தெரிந்து கொள்ளலாம், அறியாமை நீங்கி ஞானம் பெற அசைக்கமுடியாத நம்பிக்கை முதலில் வேண்டும் என்பது தெரியாதா? தெரியும், ஆனாலும் முதலில் புரிந்து கொண்டால் தானே, பிறகு நம்பிக்கை வரும் என்கிறார்கள். இது விதண்டாவாதம்.

கல்லூரியில் சேரும் மாணவன், படித்து முடித்து வேலை கிடைக்கும் என்று நம்பித்தான் சேருகிறான். பிறகுதான் அறிவைப் பெறுகிறான். நம்பிக்கை முதலில்; அறிவு பின்னர் பெறலாம்.

கம்ப்யூட்டர், என்ஜினீயரிங், மருத்துவம், சட்டப்படிப்பு எதுவும் முதலில் புரியாதுதான். நிறைய பணம் வரும் என்று நம்புவதால், எல்லாமே படித்துப் புரிந்து கொள்கிறார்கள்.

ஆயிரக்கணக்கானோர் உலகில் பல்வேறு மதங்களில் நம்பிக்கையின் அடிப்படையின் பேரில் தான் ஞானிகளாகவும், சிறந்த அறிஞர்களாகவும், சாதனையாளர்களாகவும் விளங்கியுள்ளார்கள்.

ஆகவே நம்பிக்கை இருந்தால் சுவை பிறக்கும்; இதுவே அறிவின் ஆரம்பநிலை. அறிவு வளர வளர சுவை வளரும். பின்பு எல்லாமே புரிந்து விடும்.

சில ஆண்டுகளுக்கு முன், ஒரு திருமண மண்டபத்தில் உறவினர் ஒருவர் என்னைத் தனியே அழைத்துச் சென்று, “ நீ ஏதோ பல்கலைக்கழகத்திலே வைஷ்ணவம் படித்ததாகச் சொல்கிறார்களே! என் கேள்விக்குப் பதில் சொல்ல முடியுமா? என்று கேட்டார்.

“கேளுங்கள்” என்றேன்.

“நான் கடவுளைக் காண வேண்டும், முடியுமா?”

“முடியும் பேஷா முடியும்!,”

“எப்படி?”

“ஒரே வழி ஆழ்வார் காட்டிய வழியே!”

“அது என்ன வழி?”

“முன்னறிவிப்பு செய்துவிட்டு, அடியேன் இல்லத்துக்கு வாருங்கள். விவரமாக சொல்கிறேன்” என்று சொல்லி அன்றைய தினம் அவரிடமிருந்து தப்பினேன்.

ஆனால் அவர் ஒரு நாள் இல்லத்துக்கு வந்து விட்டார்; வந்து அதே கேள்வியைக் கேட்டார்.

“நான் கடவுளைக் காண வேண்டும். முடியுமா?.

அடியேன் சொன்னேன்,

“உங்கள் கேள்வியைப் புரிந்து கொள்ளுங்கள்.

முடியுமா? என்ற அவநம்பிக்கையைத் தொலையுங்கள். நம்பிக்கை, முழுநம்பிக்கை, மஹாவிச்வாசம் முதல் படி. விமானத்தில் ஏறும்போதே, போய்ச் சேருவோமா என்று சந்தேகப்பட்டு, விமானியைக் கேள்வி கேட்டுத் துளைத்தால், உங்களை விட்டுவிட்டு விமானம் பறந்து விடும். வியாதி தீர வைத்தியர் ஊசி போடுமுன், ஊசியிலுள்ள மருந்தின் விபரங்களைக் கேட்டுத் தெளிவடைந்து பின் தான் ஒப்புக் கொள்வேன் என்றால், அவர் உங்களை வியாதியுடனேயே கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவார். வழிகாட்டும் ஆழ்வார் மிகப்பெரிய ஞானி, பல பெரியவர்கள் அவர் வழியே சென்று பலன் அடைந்துள்ளார்கள் என்பது தெரிந்தும், “முடியுமா?” என்ற கேள்வி ஏன்? சந்தேகத்தை உதறித் தள்ளா விட்டால் செல்ல வேண்டிய பாதையில் முதல் படியிலேயே தடுக்கி விழ வேண்டியதுதான். முதலில் நம்ப வேண்டும், பிறகு எல்லாமே புரியும், பாதை நன்கு தெரியும்.

ஆக, கடவுளைக் காண முதலில் வேண்டியது அவனிடம் அசைக்க முடியாத நம்பிக்கை. பிறகு, உங்கள் கேள்வியில், “நான்” “கடவுள்” “காணவேண்டும்” என்ற சொற்களுக்கு அர்த்தம் தெரிந்து கொள்ள வேண்டும்.

“ஆழ்வார் காட்டிய வழியில் கடவுளைக் காணலாம் என்றீர்களே, அது என்ன வழி என்பதை முதலில்

சொல்லுங்கள்" என்று ஏதோ "ஒரு சொல் விடை" (ONE WORD ANSWER) கேட்டார் நண்பர்.

அடியேன் சொன்னேன்: "ஆழ்வாரின் வழியைக் கூறும் தகுதியோ ஞானமோ, பக்தியோ எதுவும் அடியேனுக்கு இல்லை 'பகவத் விஷயம்' என்னும் திருவாய்மொழியை வித்வான்களிடம் முறைப்படி கற்றுத் தெளிய வேண்டும். அதற்குப் பல நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் ஆகலாம்.."

"அப்படியா? அதெல்லாம் சாத்தியப்படாது. உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்கள். எனக்கு அதுவே போதும். உங்களால் முடியாவிட்டால் நான் போகிறேன். தொடர்ந்து அறியாமையிலேயே காலம் கழிக்கிறேன்." என்று சொல்லி எழுந்து விட்டார்.

ஏதோ தெரிந்து கொள்ள வேண்டுமென்று மிகுந்த ஆவலுடன் வந்த நண்பரை விட்டுவிடக் கூடாது என்று அவரை அமரச் செய்து, அடியேன் ஏற்கனவே எழுதி வைத்த பல குறிப்புகளைக் கொண்டு ஓர் குட்டிப் பிரசங்கம் செய்தேன். அவரும் ஓரளவு திருப்தியுடன் விடை பெற்றார்.

அடியேன் அன்று நண்பருக்குச் சுருக்கமாக விளக்கியதையே இந்த நூலில் விளக்கமாகச் சுருக்கியுள்ளேன்.

நான் கடவுளைக் காண முடியாது. 'நான்' என்ற அகந்தை இல்லாத ஆழ்வார் கடவுளைக் கண்டார். ஆனால், எம்பெருமாளைக் காண்பதற்கு முன் அவர் பட்ட பாடு புலம்பிய புலம்பல்.....அப்பப்பா!

"வாணுதலிம்மடவரல் உம்மைக்
காணும் ஆசையுள் நைகின்றாள் விறல்
வாணன் ஆயிரம் தோள் துணித்தீர் உம்மைக்
காண நீரிரக்கமிலீரே" *(2-4-2)*

"....கூவுகின்றேன் காண்பான் எங்கு
எய்தக் கூவுவனே" *(3-2-8)*

"..... காண்பதென்று கொல் கண்களே" *(3-6-10)*

"உன்னை மெய் கொள்ளக் காண
விரும்பு என் கண்களே" *(3-8-4)*

"பாவியேன் நெஞ்சம் புலம்பல் பலதானும்
கூவியும் காணப் பெறேன் உனகோலமே" *(3-8-7)*

கோல மேனி காண வாராய்
கூவியும் கொள்ளாயே" *(4-7-1)*

"கள்ள மாயா உன்னை என் கண்
காண வந்தியாயே" *(4-7-2)*

"கண் கட்குத் திண் கொள்ள ஒரு நாள்
அருளாய் உன் திரு உருவே" *(5-10-7)*

"....நண்ணி உனை நான் கண்டு
உகந்து கூத்தாட" *(6-9-2)*

"நொடியார் பொழுதும் உன பாதம் காண
நோலாதாற்றேனே" *(6-10-7)*

"கட்கிலீ உன்னைக் காணுமாறு அருளாய்" *(7-2-3)*

"ஒரு நாள் காண வாராயே" *(8-5-1)*

"தொண்டனேன் உன் கழல் காண
ஒருநாள் வந்து தோன்றாயே" *(8-5-6)*

"எங்கே காண்கேன்...... இங்கே காண
இப்பிறப்பே மகிழ்வர்.." *(8-5-11)*

இவ்வாறே பலப்பல இடங்களில் ஆழ்வார் எம்பெருமானைக் காண வேண்டுமென்று தன் ஆசையை - அவாவை - வெளிப்படுத்துகிறார்.

பின்னர், பத்தாம் பத்தில் "கண்டேன் கமல மலர்ப்பாதம்..." என்று அருளி, அதற்குப் பின்னர் முடிவில் "என் அவா அறச் சூழ்ந்தாயே" என்று மனநிறைவுடன் பூர்த்தி செய்கிறார்.

"அவா அறச் சூழ்கையாவது, தன்னைக் காண வேண்டும் என்று விடாய்த்த அடியார்களுடைய விடாய் தீரக் கலக்கை" (அவதாரிகை)

"இவர் சரணம் புக, அவன் அருட்கடல் ஆகையாலே, இவரை இப்படியே நோவுபட விட்டு வைத்தோமே அன்றோ" என்று இவரைக் காட்டிலும் தான் நொந்து பிராட்டியோடே கூடப் பெரிய திருவடி மேல் இவர் விரும்பியபடியே எல்லாவற்றாலும் நிறைந்தவனாய் வந்து தோற்றி..." ஈடு.

திருவாய்மொழி என்கிற மகாசமுத்திரம் முழுவதுமாகக் கற்று, அனுபவிக்க ஒரு பிறவி போதாது. இருப்பினும், சில பாசுரங்களை, முக்கியமாக கோயில் திருவாய்மொழிப் பாசுரங்களிலிருந்து சில அர்த்த விசேஷங்களைக் கொண்டு எம்பெருமானைக் காண வேண்டும் என்கிற ஆழ்வாரின் அவா எப்படி பூர்த்தி அடைந்தது என்பதை விளக்க முயல்கிறேன்.

"அவா அறச் சூழ்ந்தாயே" என்கிற அந்த முடிவான பேரின்பத்தைப் பெற, ஆழ்வார் எத்தனைப் படிகளைக் கடந்தார்; பரபக்தி, பரஞானம், பரமபக்தி நிலைகளை எல்லாம் அடைந்தார் என்ற மகத்தான அனுபவத்தில், சில துளிகளை அடியேன் தெளித்துள்ளேன். அந்தச் சில துளிகளும், காஞ்சி ஸ்வாமியின் திவ்யார்த்த தீபிகை, அமரர் புருஷோத்தம நாயுடு அவர்களின் நூல், ஈடு வியாக்கியானம், சில காலட்சேப, உபந்யாஸங்களில் கேட்டு எழுதி வைத்த குறிப்புகள் ஆகியவற்றிலிருந்து தெறித்தவையே. அத்துடன், அடியேனின் சில அனுபவங்களிலிருந்து தெரிந்து கொண்டவை மிகச் சில சேர்த்துள்ளேன்.

என்னதான் எழுதினாலும், ஆழ்வார் நெஞ்சத்தை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் "ஆச்சார்ய ஹ்ருதயம்" மூலமாகப் படம் போட்டுக் காட்டியதைப் போல் காட்ட முடியுமா?

எப்படித்தான் எடுத்துச் சொன்னாலும் ஸ்ரீநம்பிள்ளையின் ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்யானத்தைப் போல் அழகாகவும், ஆழமாகவும் சொல்ல முடியுமா?

முடியாதுதான். இருந்தாலும், அடியேன் நண்பரைப் போன்றவர்கள் சிலர் இந்த நூலினால் பயனடைவார்கள் என்று எண்ணுகிறேன்.

இது முதல் பாகம்தான். இரண்டாம் பாகம் விரைவில் வரும் என்பதை இப்போதே சொல்லி உங்களை எச்சரித்து விடுகிறேன்.

அடியேனுக்கு ருசி உண்டாக்கி வளர்த்தவர்கள் ஸ்ரீ உ.வே. குமாரவாடி ஸ்வாமி (தற்போது எம்பார் ஜீயர் ஸ்வாமி), பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஸ்ரீ உ.வே. நரசிம்மாசாரி ஸ்வாமிகள், ஸ்ரீ V.K.S.ராகவன் ஸ்வாமிகள், ஸ்ரீ உ.வே. M.A.வேங்கடகிருஷ்ணன் ஸ்வாமிகள் ஆகியோரே. அவர்களை என்றும் மறவேன்.

சாமான்யன் எழுதியது என்பதால் அசட்டை செய்து விடாதீர்கள்.

எழுதியுள்ள விஷயம் எல்லாவற்றிலும் மேம்பட்டது. நிதானமாக ஊன்றிப்படிக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

பகவத் விஷயத்தின் முதல் இருபத்து இரண்டு பாசுரங்கள், எம்பெருமானைக் காண கடந்து செல்லவேண்டிய மிக மிக முக்கிய படிகள். இவைகளைத் தெரிந்து கொண்டால், மற்றவை பின்னர் பார்ப்போமே!.

பின்குறிப்பு: உலகப் புகழ் பெற்ற இரு விஞ்ஞானிகள் அன்ட்ரூ ந்யூபர்க் மற்றும் இயுஜீன் த அகில்லி ஆகியோர் ஆழ்ந்த தியானம் செய்யும் சிலரை,

தங்கள் ஆராய்ச்சிக் கூடத்திற்கு அழைத்து, ஓர் ஆய்வு நடத்தினர். விஞ்ஞானிகள் 'மூளை'யைப் பற்றிய ஆராய்ச்சி செய்து வருபவர்கள். தியானத்தின் மூலம் கடவுளைக் கண்டேன் என்று சொல்வது உண்மையா, அல்லது வெறும் கட்டுக்கதை அல்லது மனப்பிரமையா என்று அறிய ஆவல் கொண்டு ஆய்வு நடத்தினர். த்யானம் செய்யும்போது, "மூளை"யின் நுண்ணிய நரம்புகளில் (Brain wires) ஏற்படும் தாக்கங்களும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் கண்டறிந்து "WHY GOD WON'T GO AWAY" என்ற சிறந்த நூலை எழுதியுள்ளனர். அவர்கள் முடிவு: ஆழ்ந்த தியானம் (பக்தி) மூலம் கடவுளைக் கண்டதாக சொல்பவர்கள் உண்மையே பேசுகின்றனர். அதாவது, கடவுளை எந்த உருவாகவோ, சக்தியாகவோ நினைத்து தியானம் செய்தாலும், அந்த உருவம், சக்தி பிரத்யட்சமாக எதிரில் தோன்றும். இது வெறும் மன மயக்கம் அல்ல என்கின்றனர். ஆக, சாதாரணமாக தியானம் செய்பவர்களாலேயே கடவுளைக் காண முடியும் என்றால் ஞான, பக்தி, வைராக்யத்துக்கு இலக்கணமாகத் திகழ்ந்த, ஆழ்ந்த பக்தியிலேயே திளைத்து, முறையாகச் சரணாகதி செய்து இறைவனைப் பற்றிய ஆழ்வார், "கண்டேன் கமல மலர்ப்பாதம்" என்றால் "நூற்றுக்கு நூறு" சத்திய வாக்கு என்று நம்ப வேண்டாமா? நம்பி, நாமும் அவர் வழி செல்ல முயற்சி செய்ய வேண்டாமா?

★ ★ ★

நன்றி

சிறந்த அணிந்துரைகள் அளித்த ஸ்ரீமத் பரமஹம்ஸ கலியன் வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள், ஸ்ரீமத் பரமஹம்ஸ அப்பன் பரகால ராமாநுஜ எம்பார் ஜீயர் ஸ்வாமிகள், முனைவர் ஸ்ரீ உ.வே. M.A. வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமிகள், ஸ்ரீஉ.வே. K.B. தேவராஜன் ஸ்வாமிகள் ஆகியோர்க்கு மனமார்ந்த நன்றி.

மிக நல்ல முறையில் நூலை அச்சிட்டுக் கொடுத்த RNR பிரிண்டர்ஸ் குழுவினர்க்கு நன்றி.

T.S. ராமஸ்வாமி

முதல் பத்து - முதல் திருவாய்மொழி

(1)

உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வரும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே

என் மனமே !

-தன் மனதுக்குத் தானே உபதேசம் செய்கிறார் ஆழ்வார்.

அறிவு சொல்படி கேட்டால் மனம் மேலே எழும் அறிவின் உரையைத் தள்ளினால் மனமும் கீழே விழும். அறிவுக்கும், மனதுக்கும் நடக்கும் இடைவிடாத போராட்டமே வாழ்க்கை.

எம்பெருமான் அருளால் பூரண ஞானம் பெற்ற ஆழ்வார் தன் மனதுக்கும் புத்தி சொல்லவேண்டியுள்ளது. ஏனெனில், மனம் ஐம்புலன்களின் ஆட்சியில் ஆட்பட்டுத்திரியும் அசித்து; கண்டபடி அலைந்து திரியும்; கட்டுக்குள் அடங்காது; அதற்கு மிக அருகில் உள்ள அறிவு சொல்வதைக் கேட்காது, தன்னையும் ஏனையோரையும் அழிக்கும் வல்லமை படைத்தது.

மனம் என்பது ஒரு சிறிய அறை. அதில் குப்பைகளை, வேண்டாத விஷயங்களைத் திணித்தால், உள்ளே இருக்கும் நல்லவை வெளியே தள்ளப்படும் (Arthur Conan Doyle)

"மனமே மனிதர்களை உலகப் பாசத்தால் கட்டுப்படுத்துவதற்கும், உலகப் பாசத்திலிருந்து நீங்குவதற்கும் காரணமாக அமைந்தது"

-விஷ்ணு புராணம்

ஆகவேதான், என் மனமே! என்று தன் நெஞ்சிடம் பேசி பிரார்த்தனை செய்யும்படி வேண்டிக் கொள்கிறார். இந்த வேண்டுதலுடன் ஆரம்பித்து, திருவாய்மொழி என்னும் இந்த பக்திப் பிரபந்தத்தை நமக்காக அருளிச் செய்து நம்மை உய்விக்கிறார்.

"என்" மனமே என்கிறார்.

மற்றவர்களுக்கு உபதேசம் செய்பவர்கள், முதலில் தன் மனதைத் தூய்மைப்படுத்துதல் வேண்டும் என்பது நியதி. மற்றவர் கண்ணில் இருக்கும் தூசியைத் துடைப்பதற்கு முன் என் கண்களில் இருக்கும் பெரிய தூலத்தை எறிதல் வேண்டும் என்பதே அடிப்படை விதியாகும். "நான் தூய்மை அடைவேனாக" என்று தனக்குத்தானே சொல்லித்திருத்திப் பின்னரே மற்றவருக்கு தைரியமாக உபதேசம் செய்ய முடியும். இல்லையானால் அந்தப் பேச்சு ஊருக்கு உபதேசிக்கும் வேஷதாரி (HYPOCRITE)ன் பேச்சாகும்.

தொழுது எழு !

மனம் தொழ வேண்டும். இறைவனிடம் இரு கைகளையும் குவித்து விட்டு, அவனை வணங்கினேன் என்று கூறலாமா? மனதாரப் பிரார்த்தித்தால், கை, கால்கள் முதலிய கர்மேந்திரியங்களும், கண் முதலிய ஞானேந்திரியங்களும் தானாகவே அவனிடம் செல்லும். "தொழுது" என்றாலே மனதார வணங்குவது என்றுதான் பொருள்.

"அஞ்சலி வைபவம்" - நூலில் இதை ஸ்ரீவேதாந்த தேசிகர் மிக அழகாக விளக்குகிறார். "தூயோமாய் வந்தோம் தூமலர் தூவித்தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க....." என்று ஸ்ரீ ஆண்டாள் 'மனத்தினால் சிந்திக்க' என்பதை அழுத்தந்திருத்தமாக கூறுகிறார்.

ஆகவேதான், "மனமே, தொழு" என்கிறார்.தொழுது 'எழு' என்பது தொழுதுப் பின் மனம் எழும்; அதாவது

(பற்பல துன்பங்களால்) வீழ்ச்சியடைந்த (DEPRESSION) மனம், அந்த வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு, எழும்.

“மனமே! அதோ கதி அடைவதைத் தவிர்த்து உயர்கதி அடைந்திடு - உஜ்ஜீவித்துப்போ” - காஞ்சி ஸ்வாமி.

“எழுவாய் மனமே” என்கிறார் ஆழ்வார்.

அதாவது, மனம் என்பதே எழுவாய் (SUBJECT) “பயனல்ல செய்து, பயனில்லை நெஞ்சே” என்பது பயனிலை. (Predicate)

“ஒழுவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வோம்” என்பது செயப்படுபொருள்; செயல்பாடு. (Object).

ஆக, மனமே, இறைவனை நெஞ்சிலே இறுகப் பற்றிக் கொண்டு மேலே மேலே எழுவாயாக” என்று ஆழ்வார் உபதேசிக்கிறார்.

சுடரடி தொழுது எழு !

‘திருவடி தொழுகை’ என்பது வைணவர்களுக்கு நன்றாகத் தெரிந்த வழிபாடு.

எம்பெருமானின் முழு உருவத்தையும் சேவிக்கும் நாம், மனதில் அவனை முழுமையாகப் பற்றி வணங்க, அவன் திருவடிகளே சரணம் என்ற கொள்கையில் உறுதி உடையவர்களாதலால் அவன் திருப்பாதங்களையே தொழுகிறோம்.

அவன் திருவடிகளை ஏன் சுடர்-ஒளி பொருந்திய அடிகள் என்கிறார்?

உயர்ந்த கல்யாண குணங்களுக்கும், ஞான பூர்த்திக்கும், முழுமையான ஆனந்தத்திற்கும் உறைவிடமான இறைவன் திருவடிகள் ஒளி பொருந்தித் தானே இருக்கும்? அல்லாமல், உலகம் தோன்றியது முதல், எத்தனையோ பக்தர்கள் அவன் ஒளிமிக்க திருவடியில் சரணடைந்து, “உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே”

என்று திருவடிகளில் புகுந்து மேலும், மேலும் ஒளி பெற செய்ததால், அவை 'சுடர் அடிகள்' ஆயின.

எம்பெருமான் திருவடிகள் எல்லா உயிர்களின் எல்லாத் துன்பங்களையும் போக்குவதாலே அருள் புரிதலை தம் இயல்பாகச் செய்யும் திருவடிகள். ஆகவேதான், அவை 'துயரறு சுடரடிகள்'.

துயர் அறு சுடரடி தொழுது எழு

இராமாநுஜர் (எம்பெருமானார்) கருத்து:

"ஸ்ரீஇராமன், நாட்டில் வாழும் மக்கள் துன்பப்படும்போது, தானும் துன்பம் அடைந்தான் என்று ஸ்ரீஇராமாயணம் கூறுகிறது. மக்கள் இன்புறும்போது, தானும் இன்புறுகிறான். அதுபோல், உயிர்கள் துயரம் தீர தானும் துயர் நீக்கினான். ஆழ்வார் மயர்வு அற, இறைவன் துயர் அற்றான்" என்கிறார். அதாவது பக்தர்களின் துக்கம் நீங்குதலை, தன் துக்கம் நீக்கியதாகக் கருதுபவன் இறைவன்.

ஒவ்வொரு அடியவனும் விரும்புவது, எல்லையற்ற ஒளி உருவமான திவ்ய மங்கள விக்கிரகமான இறைவனின் திருவடிகளை.

பால் குடிக்கும் போது குழந்தை, தன் தாயின் மார்பிலே வாய் வைப்பதுபோல், ஆழ்வாரும் "உன் தேனே மலரும் திருப்பாதம் (1-5-5) என்கிற திருவடிகளிலே வாய் வைக்கிறார்.

திருவள்ளுவரும் உலகப் பொதுமறை திருக்குறளில், கடவுள் வாழ்த்தில் ஏழு குறள்களில் திருவடிகளையே கூறுவதை நினைவில் கொள்வோம்.

ஆழ்வார், உலகச் சிறப்பு மறையான திருவாய்மொழியில் பல பாசுரங்களில் திருவடிகளின் மேன்மையை அறிவுறுத்துகிறார்.

உயிரின் தன்மைக்கு ஏற்ற தொழில் இறைவனை வணங்குதல். ஆனால் நித்திய சம்சாரிகளாகிய நமக்கு இறைவன் நினைவும் போய் அவனை வணங்கவேண்டிய கடமையும் மறந்து, உண்டியே, உடையே உகந்து செல்லும் இயந்திரங்களாக மாறி அலைந்து திரிவதே முழு நேர வேலையாகக் கொண்டுள்ளோமே!.

ஆகவேதான், ஆழ்வார் இறைவன் திருவடிகளைத் தொழுது எழு என்கிறார்.

"கடவுளை உள்ளபடி அறிதல்என்பது இல்லையானால், அவன் இல்லாதவன் ஆகிறான்" என்னும் நிலை கழிந்து, "கடவுளை உள்ளபடி அறிதல் என்பது உண்டானால் அவன் உள்ளவன் ஆகிறான்" என்கிறவர்கள் கூட்டத்தில் ஒருவனாக நல்ல பாதையில் செல்ல முயற்சி செய்" (தைத்ரிய உபநிஷத்)

'அடியிலே (முன்பு) தொழாமையால் வந்த குறைவு நீங்கும்படி அடியிலே (திருவடிகளை) தொழுது பிழைப்பாயாக' என்கிறார்.

'துயர் அறு' என்பது இங்கே பிறவிப் பெரும் துயர் என்பதே. அதாவது இறைவனிடமிருந்து வந்த இந்த உயிர் பிறவிக் கடலைக் கடந்து மீண்டும் இறைவனைச் சேர ஏங்குகிறது., துன்பப்படுகிறது, துயர் கொள்கிறது, துடிக்கின்றது. அது போன்றே, தன் குழந்தையாகிற உயிர் தன்னிடமிருந்து பிரிந்து சென்று, சம்சார வாழ்க்கையில் உழன்று, தன்னையும், இறைவனையும் மறந்து, மறந்துவிட்டோம் என்ற ஏக்கமும் இல்லாமல், 'தேகமே ஆத்மா' என்று ஐம்புல ஆசாபாசங்களுக்கு அடிமையாக கிடந்து உழல்கின்றதே, அந்தச் சூழலிலிருந்து விடுபட்டு என்னிடம் வந்து சேராதா என்று இறைவனும் ஏங்குகிறான். ஆக, இருவர் துயரமும் தீர "என் மனமே, அவன் அருளைப் பெற, அவன் திருவடிகளைத் தொழுது, எழுவாயாக" என்கிறார்.

"மாயோயே, மாயோயே, மறுபிறவி அறுக்கும் மாயோயே" - பரிபாடல்.

ஆழ்வார் 'துயர் போக' என்றோ, 'துயர் நீங்குக' என்றோ சொல்லாமல் 'துயர் அறு' என்பதால் உயிரின் மிக உயர்ந்த இலட்சியமாக மறு பிறவி என்னும் விதியை 'அறுத்தல்' வேண்டும்.

மீண்டும் இறைவன் என்ற அந்த எசமானிடம் போய்ச் சேர வேண்டும். Salvation அல்லது Reconnection with Source என்பர். சராசரி மனிதன் சம்சார வாழ்வில் ஆசாபாசங்களினால் ஏற்படும் துன்பங்கள் நீங்க இறைவனை வேண்டுகிறான். ஆனால், மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார், "கூவிக் கொள்ளும் காலம் இன்னும் குறுகாதோ?" என்று ஏங்கி, "என் அவா அறச் சூழ்ந்தாயே" என்று முடிப்பதனால், எம்பெருமானை அடையவில்லையே என்ற ஒரே துயர் ஆழ்வாருக்கு.

அந்தத் துயர் அறுக்க, அவன் திருவடிகளைத் தொழுது எழு என்கிறார்.

-அவன் திருவடிகளை என் மனம் தொழ, அவன் தகுதி என்னவோ? அவன் என்ன அவ்வளவு உயர்ந்தவனா?

அவன்:

முதலில், இறைவனை மரியாதைக்கும், அச்சத்திற்கும் உரிய 'அவர்' என்னாமல் , அன்புக்கும், ஆசைக்கும் உட்பட்ட நெருங்கிய, உற்ற, தோழனாகக் கருதி 'அவன்' என்னும்படி நம்மைச் சொல்ல வைக்கிறாரே ஆழ்வார், அதற்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். இராமபிரான் குகப் பெருமானைத்தன் தம்பிக்கும், மனைவிக்கும், தனக்கும் நெருக்கம் உண்டாக்கியதுபோல், ஆழ்வார், பகவானை 'அவன்' என்று சொல்லி, நமக்கும் பகவானுக்கும் பிரியா இணைப்பை, நெருக்கத்தை முதலில் ஏற்படுத்தி அருள்கிறார்.

உயர்வற உயர்நலம் உடையவன்

ஆனால், இறைவனை 'அவன்' என்று சொல்லி நமக்கு அடையாளம் காட்டியதால், ஏதோ அவனும், நாமும் ஒரே

சமமான நிலையில் உள்ளோம் என்று ஆகுமோ? அவன் கல்யாண குணங்கள் எனும் நற்குணங்கள் முழுமையாக உடையவன், இதைவிட பூர்ணமான, இதற்கு மிஞ்சிய நல்ல குணங்கள் யாருக்குமே இருக்க முடியாது என்ற அளவிற்கு, அவன் குணநலன்கள் அமைந்துள்ளன.

அவன் குணங்கள் அற்றவன், (நிர்க்குணன்) அல்லன் என்பதை முதலிலேயே தெளிவாக, அழுத்தந்திருத்தமாகக் கூறி நம் வேதாந்த சித்தாந்தத்தை நிலைப்படுத்துகிறார்.

இறைவன் குணங்கள் இல்லாதவன் எனும் மற்ற மத நம்பிக்கைகளை ஆழ்வார் முதலிலேயே மறுக்கிறார். அவன் திருக்குணங்களையும் அவன் திருமேனியையும் அனுபவித்து, பொழுது போக்கி, இன்பம் காண்பதே வைணவர்களின் சாரமான வாழ்வு. அந்த ஆதாரத்தை உறுதியுடன் ஆழ்வார் முதலிலேயே நிலை நிறுத்துகிறார்.

அவன் குண வெள்ளத்திற்கு எதிரே அடியேன் அகங்காரத்துடன் மரம் போல் நிமிர்ந்து நின்றால் அழிந்துவிடுவேன்; கொடிபோல் வளைந்து "நீசனேன், நிறைவு ஒன்றும் இல்லாதவன்" என்ற தன்னடக்கம் கொண்டு அவன் திருவடியில் தலை சாய்ந்தால் பிழைத்துப் போவேன்.

இளைய பெருமாள் எனும் புகழ் பெற்ற இலக்குவன், பெருமாள் ஸ்ரீராமனைப் பற்றிக் கூறும்போது,

"அவர் அடியேனைத் தனக்குப்பின் பிறந்தவன் (தன் தம்பி) என்று இருப்பார்; நான் அவன் குணங்களுக்குத் தோற்று 'அவர் அடியவனாய் இருப்பவன்' என்றார்.

காட்டில் அத்ரி பகவான் ஆச்ரமத்தில் அவர் தர்ம பத்தினியிடம் (அநுசூயை) சீதாபிராட்டி சொன்னார். "எனக்கு எம்பெருமான் (ஸ்ரீராமன்) பக்கலில் ஸ்வரூபியாகவே பக்தியும், மரியாதையும் உண்டு என்பதை உலகத்தார் அறியார். அவர் இயற்கையில் குணசீலராக இருப்பதால்தான் என் பக்தியும், மரியாதையும் என அவர்கள் எண்ணலாம். அவருடைய நற்குணங்களும் ஏதோ ஒரு காரணத்தால், எப்போதாவது அவரை விட்டுப்

பிரிய நேரிட்டாலும், நான் அவரிடம் அதே பக்தியுடனும், மரியாதையுடம்தான் இருப்பேன்" என்கிறார்.

ஆழ்வாரும் அதேபோன்று எம்பெருமானிடம் ஸ்வரூபமாகவே (இயல்பாகவே) அடிமைப்பட்டு இருந்தாலும், அவன் குணங்களுக்கும் தோற்றுக் கிடந்ததால்தான் பாசுரங்கள் மலர்ந்தன.

"ஆகிலும் கொடிய என் நெஞ்சம்
அவன் என்றே கிடக்கும் எல்லே"

(திருவாய்மொழி 5-3-5)

"இயற்கையில் அமைந்தவனாய், எல்லை அற்றவனாய், மேன்மையினையுடையவனாய், எண் இல்லாதவனாய் உள்ள கல்யாண குணங்களின் கூட்டத்தை உடையவன் இறைவன்" - ஆளவந்தார்.

மயர்வற மதியநலம் அருளினன்

குணபூர்த்தியுடைய இறைவன் ஆழ்வாருக்கு என்ன உபகாரம் செய்தான்? மயர்வு அற மதிநலம் அருளினான்.

அதாவது, இறைவன் ஆழ்வாருக்கு முழுமையான ஞானத்தை அருளினான்.

மூன்று வித அறியாமைகளில் மூழ்கியவர்கள் சம்சாரிகள்;-

(1) தேகமே ஆத்மா (உயிர்) என நினைத்தல் (ஞாநாநுதயம்) ஓர் அறியாமை.

அரைகுறை விஞ்ஞானிகளும், அவர்களின் ஆதரவாளர்களும், அப்படித்தான் நம்புகிறார்கள். 'உயிர்' என்று ஒன்றும் இல்லவே இல்லை. தேகத்தின் மூளை வேலை செய்ய நிறுத்தியதும் உடல் சாய்கிறது; மரணம் நேருகிறது. அதாவது, அவர்கள் கருத்துப்படி எல்லாமே MATTER எனப்படும் பிரக்கிருதிதான். 'உயிர்' என்று தனியாக எதுவும் உடலில் இல்லை என்கிறார்கள். ஆனால், சமீபகால ஆராய்ச்சியில் ANTI-MATTER என்பது உள்ளது

என்றும், அதுதான் உடலில் புகுந்து அதை இயக்குகிறது என்றும் கருதுகின்றனர். அதாவது இந்த உடல் வெறும் solid, liquid, vapour ஆகியவற்றின் சேர்க்கைதான் என்கிறார்கள், அவைகளுடன் energy என்ற சக்தியும் உண்டு என்கிறார்கள். விஞ்ஞானிகளுக்குள் இது முடிவு பெறாத ஆராய்ச்சி.

ஆனால் பல ரிஷிகளாலும், பல மதத் தலைவர்களாலும், ஞானிகளாலும் ஒப்புக்கொண்ட உண்மை 'உயிர்' உடலில் இருக்கிறது என்பதே.

ஸ்ரீவைஷ்ணவத்தில் உடல் வேறு, உயிர் வேறு, இரண்டும் ஒன்றல்ல என்பது உறுதியான அடிப்படைக் கொள்கை. இரண்டும் ஒன்றே, ஆத்மா (உயிர்) என்பது தனியாக இல்லை என்பதும், தேகமே ஆத்மா என்பதும் முழுமையான அறியாமை. அந்த அறியாமையால், தேகத்தின் ஐம்புல ஆட்சியில் சிக்கி ஆசை, பாசம் என்று அலைகிறோம்.

(2) அந்யதா ஞானம்: பிற தெய்வங்கட்கு தன்னை அடிமையாக நினைத்தல்.

ஒரு தெய்வத்தை நெஞ்சினில் நிறுத்தி, அதையே வணங்கி, பூசித்து, பக்தி செய்து, சரண் அடைந்து உய்ய வேண்டும்.

இதைத்தான் "PERSONAL GOD" என்று மேற்கத்திய தத்துவ ஞானிகள் கூறுகிறார்கள். முன்பு, இந்தியாவில் பல கடவுள்கள், பல விக்கிரக ஆராதனைகள் என்று கிண்டல் செய்தார்கள். இன்று இந்த இஷ்ட தெய்வ - PERSONAL GOD - வழிபாட்டினை வெகுவாக மதித்துப் போற்றுகிறார்கள். ஏனெனில், நெஞ்சினில் இறுக்கமாகப் பிடித்துக் கொள்ள ஒரு தெய்வம், மற்றவை மதிக்கத்தகுந்த போற்றுதற்குரிய தெய்வங்கள், அவைகளைத் துஷிக்கக்கூடாது, வெறுக்கக் கூடாது, எல்லாமே தனிப்பட்டவன் தேர்வு (CHOICE) என்ற கொள்கையே இன்று சிறந்தது. என்னைப் பெற்றெடுத்த பெற்றோர்களுக்கு பாத பூஜை செய்வேன், வழிபடுவேன், வணங்குவேன். என் பக்கத்து வீட்டுக்காரரின் பெற்றோரை

பெரியவர்கள் என்று மதிப்பேன், அவர்களுக்கு தினமும் பாதபூஜை செய்யவேண்டும் என்பது இயலுமா?. பரம்பரை காரணமாகவும் சொந்த நம்பிக்கை காரணமாகவும் தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்கும் உண்டு. ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆழ்வார், "அவரவர் இறையவர்... குறைவிலர் இறையவர்" என்று அருளிச் செய்துள்ளார்.

மேலும், ஒருவன் இரு எஜமானர்களுக்கு வேலைக்காரனாக இருக்க முடியாது. ONE CANNOT SERVE TWO MASTERS. ஒரே எசமானுக்குத்தான் தொண்டு செய்யமுடியும்.

ஆக, பிற தெய்வங்களுக்குத் தன்னை அடிமையாக நினைத்தல் ஓர் அறியாமை.

(3) விபரீத ஞானம்; தனக்குத்தானே உரியவன் என்று நினைப்பது. அதாவது, ஆத்மா (உயிர்) இறைவன் என்ற எஜமானின் சொத்து. ஆனால், அதை மறந்து, 'நான்' என்ற அகங்காரத்துடனும், 'என்னுடையது' என்ற மமகாரத்துடனும், எஜமானனின் சொத்தாகிய உயிரை என்னுடையது என்று எண்ணி ஆட்டங்கள் போடுகிறோமே, அப்படிப்பட்ட அறியாமை விபரீத ஞானம். மேலும், சிலர் சிற்றின்பங்களை விட்டுவிட்டு, ஆத்மாவின் உயர்வு தெரிந்து எம்பெருமானிடம், எஜமானனிடம், அந்த ஆத்மாவைச் சமர்ப்பிக்க இசையாமல், தானே அனுபவித்து இன்பம் காண்கிற 'கைவல்ய நிஷ்டர்கள்', அவர்களும் அறியாமையில், விபரீத ஞானத்தில் ஆட்பட்டுக் கிடப்பவர்களே.

ஆக, இப்படிப்பட்ட மூன்று அறியாமைகளையும் நீக்கி, தெளிந்த நீரோடையைப் போன்று முழுமையான ஞானத்தை ஆழ்வாருக்கு அருளினான் எம்பெருமான்.

அருளினன்

ஆழ்வாருடைய மயர்வை எம்பெருமான் போக்கினான். சம்சாரிகளுடைய மயர்வை ஆழ்வார் போக்குகிறார். அடியோடு ஞானமே இல்லாமையும், ஒன்றை வேறொன்றாக அறிவதும், அதுவோ, இதுவோ என்று சந்தேகம் கொள்ளலும், தெரிந்ததை மறப்பதும் ஆகிய இவையெல்லாம் மயர்வு. அப்படிப்பட்ட மயர்வு மனிதர்களுக்கு வராமல், வந்திருந்தாலும் அடியோடு போகைக்கும், ஆழ்வார் பாசுரங்களைத் தந்தருளி சம்சாரிகளை வாழ்விக்கிறார்.

அயர்வறும் அமரர்கள் அதிபதி

எப்போதும் மறதி என்பதே இல்லாத நித்யசூரிகள்; இடைவிடாமல் எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும் கருடாழ்வார் முதலியோர்கள் மிகச் சிறந்தவர்கள். அந்த நித்யசூரிகளுக்கு தலைவனாக விளங்குபவன் எம்பெருமான். அவனே தேவாதி தேவன்.

நோக்கம்

இந்தப் பாசுரத்தை ஆழ்வாரின் பிரபந்தத்திற்கு "இறைவணக்கம்" என்று தொடக்க இலக்கணமாக மட்டும் கொள்ளாமல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாசுரங்களை அருளிச் செய்யும் முக்கிய நோக்கத்தை வெளிப்படுத்தும் பாசுரமாகவும் கருத வேண்டும்.

திருவாய்மொழி என்னும் இப்பிரபந்தத்திலே நிரூபிக்கப்படும் தத்துவ (உண்மை), ஹித (உபாயம்), புருஷார்த்தங்களை (பலன்) சுருங்கச் சொல்லக்கூடிய பாசுரம்.

அதாவது, திருமால் எனப்படும் ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவம் என்றும், அவனது திருவடிகளை தொழுவதே ப்ரமஹிதம்(சிறந்த உபாயம்) என்றும், அதனைப் ப்ரார்த்தித்து பெறுவதே புருஷார்த்தம் (பலன்) என்றும் உணர்த்துகிறது.

அறிவுக்கும் மனதுக்கும் உரையாடல் நம் ஒவ்வொருவருக்குள்ளும் நடந்து கொண்டுதான் இருக்கிறது- பெரும்பாலும் அறிவுரை தோற்று மனம் வெற்றி பெறுவதால், துன்பங்களே மிஞ்சுகின்றன.

முதல் பத்து பாசுரங்களிலும் இறைவனாகிய 'அவன்' இறைமைத்தன்மையை ஆழ்வார் அருளி, நம் நெஞ்சில் அவன் திருவடிகள் மீதுள்ள உறுதியை நிலைப்படுத்தி, மனதில் வலுவான அடித்தளம் அமைக்கிறார்.

"மனசு சரியா இல்ல" என்று புலம்புகிறார்கள். இந்தப் பாசுரத்தை தொடர்ந்து அநுஸந்தானம் செய்தால், (பக்தியோடு சொன்னால்) கவலைகள் பறந்து போகும். மனம் உறுதியும், அமைதியும் அடையும்.

ஆக, இறைவனைத் தெரிந்து கொள்ள, அவன் 'திருவடி தொழுகை'யுடன் தொடங்கலாமே.

MORE THINGS ARE WROUGHT BY PRAYER
THAN THIS WORLD DREAMS OF

- Lord Tennyson

★ ★ ★

(2)

மனன கமலமற மலர்மிசை யெழுதரும்
மனனுணர் வளவிலன் பொறியுணர் வவையிலன்
இனனுணர் முழுநலம் எதிர் நிகழ் கழிவினும்
இனனிலனெனனுயிர் மிகுநரை யிலனே

உயிருக்கு உயிர்

ஆத்மாவின் (உயிர்) தன்மை எப்படிப்பட்டது? மனத்தின் குற்றங்கள் எல்லாம் நீங்கி, தூய்மை பெற்று பின்பு மனத்தின் யோக ஞானத்தால் அறியப்படுவது ஆத்மா.

அப்படிப்பட்ட ஆத்மாவின் தன்மையை உடையவனோ இறைவன்? அல்ல.

உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் நம் இந்திரியங்களால் அறியப்படுகின்றன. அப்படி அறியப்படும் தன்மையுடையவனோ இறைவன்? அல்ல. எதிர்காலம், நிகழ்காலம், இறந்த காலம் ஆகிய எந்த காலத்திலும் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவனான இறைவன்,

ஞான மயமாகவும் ஆனந்த மயமாகவும் இருப்பவன். இத்தகைய இறைவன் என் உயிருக்கு உயிர் ஆவான்.

அவன் தன்மை

இறைவன் இதைவிட மேம்பட்டவன், இப்படிப்பட்டவன் அல்லன், இப்படிப்பட்ட பொருள் வேறு இல்லை என்று எல்லாம் சொல்லலாமே தவிர, அவன் இப்படிப்பட்டவன் என்று அறுதியிட்டு, அளவிட்டு கூறமுடியாதவன்.

GOD CANNOT BE COMPREHENDED; IF HE CAN BE COMPREHENDED HE IS NO GOD AT ALL

இறைவன், "இதைப் போன்றவன், அதைப் போன்றவன்" என்று உபமானத்தால் விளக்கி அறிய முடியாதவன்.

ஆனாலும், உபநிஷத்தும், உபமானத்தைக் கொண்டே பரப்பிரம்ம ஸ்வரூபத்தை நிருபிக்கிறது.

ஆழ்வாரும்,

"கடிசேர் நாற்றத்துள்ளானை
இன்பத் துன்பக் கழி நேர்மை
ஒடியா இன்பப் பெருமையோன்
உணர்வில் உம்பர் ஒருவனே. (திரு..8.8.2)

என்று உபமானம் மூலமாகத்தான் நிருபிக்கிறார்.

அவனுக்கு உபமானம் உண்டோ?

உயர்வற உயர்நலம் உடைய இறைவனை உபமானம் சொல்லி விளக்குவது சரியோ? கூடாதுதான். ஆனாலும் சொல்கிறோம். சிற்றறிவுக்கு எட்டிய வரைச் சொல்லிக் கொஞ்சமாவது மனதில் பதிய வேண்டும் என்பதே நோக்கம்.

"எம்பெருமானை உபமானத்தால் புகழவும் வேணும்; உடனே ஐயோ! சாதாரண வஸ்துவுடன் ஒப்பிட்டு சொல்லிவிட்டோமே" என்று வருந்தவும் வேணும்" என்கிறார் காஞ்சி ஸ்வாமி.

"எவனிடத்திலிருந்து இந்தப் பொருள்களெல்லாம் உண்டாகின்றனவோ, எவனால் உண்டானவை பிழைக்கின்றனவோ, அழிவினை அடைந்து பிரளயத்தில் எவனை அடைகின்றனவோ, அவனை அறிவாய்; அவனே பரம்பொருள்" (தைத்ரிய உபநிஷத்)

இறைவன் தன் குணங்களைக் காட்டி ஆழ்வாரை வசீகரித்தான். அந்தக் குணங்கள் ஓர் உருவத்தைப் பற்றித்தான் இருக்க முடியும் என்பதால் பற்றுக் கோட்டிற்கு உருவினை "அவன்" என்று அருளிச் செய்தார் முன் பாசுரத்தில்.

அவன் வேறுபட்டவன்

அந்த இறைவன் உயிர்ப் பொருள், உயிரில்லாப் பொருள் ஆகியவற்றிற்கு முற்றிலும் வேறுபட்டவன் என்று அவனை அனுபவிக்கிறார்.

மனத்தில் உண்டாகும் அறிவின்மை முதலிய குற்றங்கள் நீங்க என்ன செய்ய வேண்டும்?

உயிர்கள் அழிவற்றவை;

ஞானமும் அழிவற்றது.

ஞானம் தோன்றுவதும், மறைவதும், ஞானம் பரவுதற்கு வழியாக உள்ள மனமே.

மனத்தால் அவனை அறியமுடியுமோ?

அந்த மனத்தில் ஞானத்திற்குத் தடையான குற்றங்களை எப்படிப் போக்குவது?

யோக நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் இயமம், நியமம், முதலிய முறைகளைக் கையாண்டு, வெளிப் பொருள்களில் ஈடுபட்ட மனத்தை உட்பொருளை நோக்கச் செய்யல் வேண்டும்.

யோக நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்ளல் சிரமம் எனத் தயங்குகிறோம். நம் முன்னோர்களும், இப்போது வாழும் பெரியோர்களும் கடைப்பிடிக்க வேண்டிய தருமங்களைச் சொன்னார்கள்; சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். செவி கொடுப்போம்; மனம் தூய்மை பெறும். மனம் என்பது ‘அசித்’ தத்துவத்தில் 24வது; உயிர் என்பது ‘சித்’ 25வது தத்துவம்; எம்பெருமான் என்கிற ஈச்வரன் 26வது, மன அறிவினால் அறியப்படுவது உயிர்; ஆனால், இறைவனின் தன்மையை மன அறிவினாலும் அறிய முடியாது.

அணு அளவுடைய ஆத்மாவை அறிவது போன்று, எங்கும் பரந்து இருக்கிற இறைவனை அறிய முடியாது.

அப்படியானால் 'மிக்கத் தூய்மை உடைய மனத்தால் அறியப் படுகிறான் இறைவன்' என்ற வேத வாக்யம் தவறானதோ?

வேத வாக்யம் சத்தியமானது என்பதைத் தூய்மையான ஆழ்வார் "கண்டேன் கமல மலர்ப்பாதம்" என்றும் 'அவா அறச் சூழ்ந்தாயே' என்றும் அருளி இருப்பதால், சாதாரண மக்களுக்குப் புலப்படாத அவன் ஆழ்வார் போன்றோகளுக்குக் காட்சி அளித்தான் என்பது தெரிகிறது.

அவனே எல்லாம்

இறைவனை நேருக்கு நேர் அறிய முடியாவிட்டாலும், ஓரளவு உபமானம் மூலம் விளக்கியுள்ளனர்.

'உப்புக் கட்டியானது உள்ளும் புறமும் உப்புச் சுவையாகவே இருப்பது போன்று, இறைவனுடைய திருமேனியும் உள்ளும், புறமும் ஞானமயமாகவே இருக்கும்' (ப்ரஹா உபநிஷத்)

"ஆனந்தமே இறைவன்" 'ஆனந்தமயமானவன்' (தைத்ரிய உபநிஷத்)

அவன் முக்காலத்திலும் ஒப்பில்லாதவன்.

எல்லா உயிர்களும் இறைவனுக்குச் சரீரம்.

எல்லா உயிர்களுக்கும் அவனே தாரகன்.

இறைவனாகிய தான் உயிர்களைச் சரீரமாகக் கொண்டு தாரகமாய் எல்லோரையும் ஏவுகின்றவனாய் இருப்பது போன்று, தன்னையும் ஏவக்கூடிய வேறு ஒரு பொருள் உண்டோ? என்றால், அவனுக்கு மேம்பட்டவர் யாரும் எதுவும் இல்லை.

"இறைவனுக்கு ஒப்பாரும், மேம்பட்டாரும் இல்லை - (ஸ்வேதஸ்வதா உபநிஷத்).

★ ★ ★

(3)

இலனது உடையனிது எனநினைவரியவன்
நிலனிடைவிசும்பிடை உருவினனருவினன்
புலனொடு புலனலன் ஒழிவிலன் பரந்த அந்
நலனுடை யொருவனை நணுகினம் நாமே

அவன் உடமைகள் எவை?

இறைவன் அதனைத் தனக்கு உடமையாக இல்லாதவன்; இதனை உடையவன் என்ற இரு தன்மையாலும் நினைக்க முடியாதவன்.

காணப்படுகின்ற இந்த உலகத்தையும், காணமுடியாத தேவ லோகத்தையும், மற்ற அனைத்துலகங்களையும் அவைகளிலுள்ள எல்லா உயிருள்ளவற்றையும், உயிரற்ற பொருள்களையும் உடையவன்; அவன் அந்த எல்லாப் பொருள்களிலும் தானாகவே இருப்பவன்.

இப்படி எல்லா பொருள்களையும் விட்டு நீங்காமல், எங்கும் பரந்திருக்கின்ற அந் நற்குணங்களையுடைய ஒப்பற்ற பகவானிடம் நாம் சேர்ந்தோம்.

நாம் வாழும் இந்த உலகத்தை லீலா விபூதி என்கிறோம். இதைப் போன்ற பல உலகங்கள் உள்ளன. (இந்த எல்லா உலகங்களும், இறைவனின் விளையாட்டிற்குரிய உலகங்கள்). இறைவன் நிரந்தரமாக நித்யசூரிகள், முக்தாத்மாக்கள் சூழ எழுந்தருளியிருக்கும் இடம் பரமபதம் - ஸ்ரீவைகுண்டம் (நித்யவிபூதி).

'உலகத்திற்குத் தலைவன்' என்பதை 'நிலனிடை விசும்பினிடை உருவினன் அருவினன்' என்கிறார்.

உயிருக்குள் உயிர்

இப்படி எல்லாவற்றையுமுடையவனாய் இருக்கும் இறைவன் நித்ய கைங்கர்ய இன்பத்தில் கருத்து ஊன்றி பரம்பதத்திலே தங்கிவிடுவானோ?

அல்ல. - இந்த உலகங்களில் உள்ளவை பட்டவற்றைத் தானும் பட்டு, உடன் கேடனாய் (தானும்கூடக் கெட்டுக்கிடப்பவனாய்) இருந்து கொண்டு நோக்குகிறான். அதாவது, எல்லாப் பொருள்களையும் உண்டாக்கி அவைகளின் உயிர் வழியே பிரவேசித்துப் பின்னர் இந்தப் பொருள்களை உருவங்களையும், பெயர்களையும் பெறும்படி செய்து, அவை ஒவ்வொன்றிலும் உட்புகுந்து, நியாமகனாய், எல்லோர்க்கும் உயிர்க்கு உயிராக நிற்பவன்.

அப்படியானால் அவன் சரீரத்தினுடைய வளர்தல், தேய்தல் முதலிய நிலைமாறுபாடோ, உயிர்களின் இன்ப துன்பங்களோ அவனுடன் பொருந்தி, அவனைப் பாதிக்கும்படி இருக்கிறானோ?

அல்ல. தான் ஒட்டு அற்று, எந்தவித பாதிப்புமற்று விளங்குகின்றான். அதாவது, அந்தந்த பொருள்களின் தன்மை வேறுபாடுகளும், இன்ப துன்பங்களும் தன்னைத் தீண்டாவண்ணம் இருப்பான்.

அந்த இருவர்

"பரமாத்மா, ஜீவாத்மா என்ற இருவர், சிறந்த ஞானரூபமான சிறகுகள் உடையவர்களாய், ஒத்த குணங்களையுடையவர்களாய், உடையவன், உடைமை என்ற உறவை உடையவர்களாய், சரீரம் என்ற ஒரே மரத்தினைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவைகளுள், ஜீவாத்மா, நல்வினை, தீவினை ஆகிய இருவினைப் பயன்களை நுகர்ந்து கொண்டிருக்கின்றான். மற்றவன் பரமாத்மா, அந்தப் பயனை நுகராமல் அமைதியாக இருக்கின்றான்" (ருக்வேதம்)

மேலிரண்டு பாசுரங்களாலும் அருளிச் செய்த குணங்களோடு கூடிய இறைவனை நினைந்து அவனைத் தொழுது எழுவோம்.

★ ★ ★

(4)

நாமவனிவனுவன் அவளிவளுவளெவள்
தாமவரிவருவர் அதுவிதுவுதுவெது
வீமவையிவையுவை அவைநலம் தீங்கவை
ஆமவையாயவை ஆய்நின்றவவரே

எல்லாம் இறைவனே

'நாம்' என்ற பெயர்ப் பொருளும், 'அவன் இவன் உவன்' எனும் ஆண்பால் பெயர்ப் பொருளும், 'அவள் இவள் உவள்' எனும் பெண் பால் பெயர்ப் பொருளும், 'அது, இது உது, எது' எனும் ஒன்றன் பால் பெயர்ப் பொருள்களும் அழிகின்ற அந்த பொருள்களும், நல்ல பொருள்களும், தீய பொருள்களும் உண்டாகும், உண்டான பொருள்களும் ஆகி நிற்கின்ற எல்லாப் பொருள்களும் இறைவனே.

முன் பாட்டில் அனுபவித்த லீலா விபூதியையே (பூலோகம்) இந்தப் பாட்டிலும், இனி வரும் பாட்டுகளிலும் அனுபவிப்போம். ஏனெனில், ஆழ்வார் சம்சாரிகளுக்குச் சொல்ல வேண்டியுள்ளது, இவ்வுலகம் இறைவனுக்கு உடைமை என்று. உலகில் காணப்படும் பொருள்கள் அனைத்தும் இறைவனுக்கு உரிமைப் பட்டவை. எப்படி? படைத்து, உண்டாக்கிய உயிர்களுள் புகுந்து, அவற்றிற்கு பொருள் ஆகை, பெயர் பெறுகை என்னும் இவை உண்டாகும்படி செய்து, இவை முற்றும் அழிந்த அன்று, கண்களுக்குத் தோன்றாதபடி மிக நுண்ணிய உருவத்தோடு தன் பக்கலில் கிடக்கும்படி இவற்றைத் தடுத்து, காரண நிலையோடு, காரிய நிலையோடு இருப்பதால், அவை அவன் (ஆட்சிக்குட்பட்டது) என்று தெரிகிறது.

உடல், உடலை விரும்பி நிற்கின்ற உயிர், உயிருக்குள் தங்கி இருக்கின்ற இறைவன் ஆகியவைகளுக்கு ஐக்கியம் அருளிச் செய்கிறோர்.

ஆக, ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால் என்னும் பேதத்தாலும், மதிக்கத்தக்க பொருள், அழியும் பொருள் என்னும் பேதத்தாலும், நலம் தீங்கவை என்னும் பேதத்தாலும், மூன்று கால பேதத்தால் வந்த விசேடங்களாலும், அறிவுடைப் பொருள், அறிவில் பொருள் ஆகிய எல்லாப் பொருள்களையும் தொகுத்து, அவற்றினுடைய தன்மை இறைவனுக்கு அறிவிக்கப் படுகிறது.

★ ★ ★

(5)

அவரவர் தமதமது அறிவறிவகைவகை
அவரவரிறையவர் எனவடியடைவர்கள்
அவரவரிறையவர் குறைவிலரிறையவர்
அவரவர் விதிவழி அடையநின்றனரே

காப்பவன் அவனே

உலகமும், உள்ள பொருட்களும், உயிர்களும் அவனுக்கு உரிமைப் பட்டவை என முன் பாசுரத்தில் அருளினார்.

அதே போன்று, காத்தல் தொழிலும் அவனுக்கு உரிமைப் பட்டது என்கிறார் இதில்.

முக்குணங்களின் வசப்பட்ட மக்களின் அறிவும், அறியும் தன்மைகள் அவரவர் குணங்களுக்குத் தக்கபடி வெவ்வேறானவை. அவர்கள் நம்பிக்கைகளும், வணங்கும் தெய்வங்களும் வெவ்வேறாக இருக்க, அவரவர்கள் அந்தந்தத் தெய்வங்களையே பற்றுக் கோடாக அடைவார்கள். அவர்களால் அடையப்பட்ட அந்தத் தெய்வங்களும் இறையவர் என்று கூறப்படுவற்கு எந்தவிதமான குறையும் இன்றி இருக்கின்றனர். காரணம் என்ன? அந்தத் தெய்வங்கள் தங்கள் ஆகமங்களில் விதித்து வைத்த வழியால் அவர்களை வணங்குகிற மக்கள் தாம் தாம் விரும்பிய பலனைப் பெறும்படியாக அத்தேவர்களுடைய உயிருக்குள் உயிராய் நின்று காக்கும் தெய்வமாகிய எம்பெருமான் திருவருள் புரிவதாலே.

செல்வங்களைச் சேர்க்கின்ற தன்மையிலும், ஆபத்துகளைப் போக்கும் தன்மையிலும் புருடோத்தமனாகிய இறைவனைத் தவிர, ஆற்றலுடைய வேறு ஒருவன் காணப்படுகிறான் இலன்' என்றும்,

'காப்பாற்றுகிற திறன் விஷ்ணுவைத் தவிர வேறு ஒருவர்க்கும் அன்று' (விஷ்ணுபுராணம்) என்று

பிரமாணங்கள் இருப்பதால், எல்லா நன்மைகளையும் செய்ய வல்லவனாய், பகையையும் போக்க வல்லவனாய், சர்வேச்வரனான எம்பெருமான் எல்லோர்க்கும் உள் உயிராய், அந்தர்யாமியாய் நின்று நடத்துவதால், எல்லோரும், எந்தப் பேதமும் இன்றி காப்பாற்றப்படுபவர்கள் ஆகிறார்கள்.

வேதங்களைத் தொடங்கும் போதும், முடிக்கும் போதும் கூறப்படுகின்ற 'ஓம்' என்ற பிரணவத்துக்குள் மறைந்துள்ளது 'அ'கரம். அது காக்கும் இறைவனைக் காட்டுகிறது. அதற்குப் பொருளாக உள்ளவன் யார்? அவனே சர்வேச்வரன் (எம்பெருமான்) என்று உபநிடதம் கூறுகிறது.

ஒரே பலனை அடையப்பல வழிகள். குணபேதங்கள், அதனால் அறிவு பேதங்கள், சுவை வேறுபாடுகள் மக்களிடம் உள்ளன. முக்குணங்களில், சத்வகுணம் மிக உயர்ந்தது; இராஜஸ குணம் மத்திமம், தாமச குணம் கீழானது. முக்குணக் கலவை ஒவ்வொருவருக்கும் இருந்தாலும், எந்தக் குணம் விஞ்சி இருக்குமோ அப்படியே சுவையும் அமைகிறது. கொள்கைகள், நம்பிக்கைகள், தேவதைகள் வேறுபாடுகளும் சுவையினால் ஏற்படும் அறிவைப் பொறுத்தே அமையும்.

'எவன் எவன் பக்தியுள்ளவனாகி, எந்தெந்த தேவர்களை வணங்க விரும்புகிறானோ, அவன் அவனுக்கு அந்தந்தத் தேவர்களை வணங்க உரிய பக்தியை நான் கொடுக்கிறேன்'. (பகவத் கீதை - 7-21)

"அவன் அவன் அந்தப் பக்தியோடு அத்தேவர்களை ஆராதனை செய்கிறான், என்னால் கொடுக்கப்பட்ட பலனையும் அடைகிறான்." (பகவத் கீதை - 7-22)

"இராமடம் ஊட்டல்" என்பர். அதாவது, தாயிடம் கோபித்துக் கொண்டு சாப்பிடாமல் வெளியே சென்ற குழந்தை அருகே இருந்த சத்திரத்தில் போய் பசியுடன் படுத்துக் கொண்டது; தாய் உணவு எடுத்துச் சென்று,

குழந்தைக்குத் தெரியாமல் சத்திரக் காரனிடம் கொடுத்து ஊட்டச் சொல்ல, குழந்தையும் தன் பசியைப் போக்கிக் கொண்டதாம். எம்பெருமான் தன்னை வணங்குபவர்க்கு மட்டுமல்லாமல், ஏனைய தெய்வங்களை வணங்குபவர்களுக்கும் அந்தத் தெய்வங்களுக்கு உள் உறைபவனாக இருந்து உதவுகிறான் என்பது கொள்கை.

எங்கள் தெய்வமாகிய எம்பெருமானை வணங்காமல், ஏனைய தெய்வங்களை வணங்குபவர்களையோ, அந்தத் தெய்வங்களையோ வெறுக்காமல், ஒதுக்காமல், எல்லோரும் எம்பெருமானாலே காக்கப்படுகிறார்கள் என்ற உயரிய நம்பிக்கை வைணவத்தின் தனிச் சிறப்பு. ஆகவேதான், சமய நல்லிணக்கத்திற்கும், ஒருங்கிணைந்த சமுதாய அமைப்பிற்கும், இந்த நம்பிக்கையே அடித்தளமாக அமைகிறது.

★ ★ ★

(6)

நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்
நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்
என்றுமோர் இயல்வினர் என நினைவரியவர்
என்றும் ஓரியல்வோடு நின்றவெந்திடரே

மாறுபட்ட நிலை உடையவன்; அருள் உடையவன்

"நிற்றல், நில்லாமை, இருத்தல், இராமை; கிடத்தல், கிடவாமை, திரிதல், திரியாமை" எனும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட நிலை உடையவன் எம்பெருமான்.

ஆகவே, அவன் எப்போதும் ஒரே தன்மை உடையவன் என நினைக்க முடியாதவன். அந்தத் தன்மை எப்போதும் மாறுபடாமல் ஒரே நிலையுடன் இருப்பவன்.

வேதங்களால் பரம்பொருள் இவனே என்று உறுதி செய்யப்பட்ட திடமான அந்த இறைவன் என் தலைவன் ஆவான்.

முன் பாசுரத்தில், உலகங்களைக் காத்தல் இறைவன் சங்கல்பத்தால் (நினைத்தவுடன்) நடப்பதால், அந்தக் காத்தல் அவன் நினைவின் கட்டுப்பாடு என்றார். இந்தப் பாசுரத்தில், அந்தக் காத்தல் செய்தல், செய்யாமை இறைவன் நினைவின் செயல் என்கிறார். அதாவது, தொழில் செய்தல், செய்யாமைகளைக் காட்டுகின்ற 'நின்றனர்' முதலிய சொற்கள், அவற்றின் நிலைக்களமான உயிர்களைக் காட்டி, அந்த உயிர்கள் இறைவனைப் பிரிந்து இருக்கும் தன்மை இல்லாததால், இச்சொற்கள் இறைவனைக் குறிக்கின்றன.

'அப்படியானால், தொழில் செய்ய, இறைவன் திருவருள் வேண்டும்; தொழில் செய்யாமல் இருக்கவும் அவன் அருள் வேண்டுமோ?' என்ற கேள்விக்கு எம்பார் 'சுவர்க்கத்திலிருந்து வேகமாக கீழே பூமிக்கு விழுந்து

கொண்டிருந்த திரிசங்கு என்பவனை அவன் விரும்பியபடி சத்திமான் என்ற முனிவர் (விசுவாமித்திரர்) பாதி வழியில் அப்படியே நிற்கும்படி செய்தாரே, ஆகவே விழுதல் எனும் தொழில் நிவர்த்திக்கும் அவன் அருள் வேண்டியிருந்தது' என்றார். ஆகவே, விழுதல் என்ற தொழில் நிகழாமை, விழாமல் அப்படியே நிற்கும் தொழில் நிகழாமை, திரிசங்குவால் முடியவில்லை; அவன் திருவருள் நிற்க வைத்தது.

காலம் உள்ளவரை ஆராய்ந்தாலும், இறைவன் இப்படிப்பட்ட ஓர் தன்மை உடையவன் என்று நினைக்கவும் முடியாது. அதுவே அவன் தன்மை. அந்தத் தன்மை, மனிதர்களால் இயற்றப்படாத எம்பெருமான் படைத்த வேதங்களால் உறுதி செய்யப்பட்டது. அப்படிப்பட்ட இறைவன் நிலை நமக்கு பயனுடையதாக உள்ளதால் "எம்திடரே" என்றார்.

உலகெங்கும் காலம் காலமாக தோன்றிய அறிஞர்களின் சிந்தனைகளிலிருந்து உதிர்ந்த கருத்துக்கள் பல மதங்களாக, பல பிரிவுகளாகவும், அவைகளைச் சார்ந்த கூட்டங்களாகவும் பிரிந்திருந்தாலும், எல்லோரும் இறைவனின் அருள் என்னும் அந்த பலனுக்காக ஒன்றுபட்டே பிரார்த்தனை செய்து கொண்டிருக்கின்றனர். அதுவே 'எம் திடர்'.

★ ★ ★

(7)

திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவைமிசை
படர் பொருள் முழுவதுமாய் அவையவைதொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர் மிகு சுருதியுள் இவையுண்டசுரனே

எங்கும் நிறைந்தவன்

முன் பாசுரங்களில், "எல்லாம் எம்பெருமானே" என்று சொல்லியிருப்பதால், ஆழ்வார் அத்வைதம் பேசுகிறாரோ என்று தோன்றலாம். அதாவது, எம்பெருமான் ஒன்றுதான் உண்மை, மற்றவை எதுவும் இல்லை; பொய், என்ற மாயாவாதம் சரி என்று சொல்கிறாரோ என்ற சந்தேகம் எழலாம்.

அந்த சந்தேகத்தை நீக்கி, ஆழ்வார் இந்தப் பாசுரத்தில் விசிஷ்ட அத்வைதத்தை தெளிவாகவும், அழுத்தமாகவும் நிலை நிறுத்துகிறார். எல்லா உயிருள்ள, உயிரில்லாத பொருள்கள் எம்பெருமான் சரீரமாகவும், அவன் சரீரியாகவும் (அவைகளைத் தாங்கும் உயிராகவும்) இருக்கும் (சம்பந்தம்) - ஐக்கியம் -இங்கே நிரூபிக்கப் படுகிறது.

திடமான ஆகாயமும், நெருப்பும், காற்றும், நீரும், நிலமும் ஆகிய இந்த பஞ்ச பூதங்களையும் காரணமாகக் கொண்ட (அவைகளின் சேர்க்கையே காரணமான) எல்லா பொருள்களும் தானேயாகிய இறைவன் அவ்வப் பொருள்கள் தோறும், உடலுக்குள் இருக்கும் உயிரைப்போன்று மறைந்து எங்கும் பரந்தவனாய் ஒளிமிக்க வேதத்துக்குள் தோன்றுபவன் ஆவான்.

வேதங்களில் அபேத சுருதி, பேத சுருதி, கடக சுருதி எனப்படும் மூவகை வாக்கியங்கள் காணப்படுகின்றன.

முன் சொல்லப்பட்ட பாசுரங்களான 'நாமவன்'(4), 'நின்றனர்'(6) ஆகியவை, அபேத சுருதியின் பொருளாக விளங்கும். அதாவது, எல்லாம் 'பிரம்மம்' என்ற ஒன்றே

உண்மை, இரண்டாவது வேறு ஒன்றும் இல்லை என்ற அத்வைத தத்துவம்.

'இலனது' (3), 'அவரவர்'(5) என்ற பாசுரங்கள் பேத சுருதியின் பொருளாக விளங்கும். அதாவது, 'பிரம்மம்', 'உலகம்' ஆகிய இரண்டும் உண்மையே என்கிற த்வைத தத்துவம்.

'திடவிசும்பு' எனகிற இத்திருப்பாசுரம் அபேதச்சுருதி, பேதச்சுருதி ஆகிய இரண்டையும் சேர்த்துக் காட்டும் கடக சுருதி - அதாவது, எம்பெருமான் என்கிற பிரம்மம் உலகைப் படைத்து, அதில் உள்ள எல்லா பொருள்களுக்கும் உள் உயிராய் நின்று இயங்கும் விசிஷ்டாத்வைத தத்துவம்.

இந்தப் பாசுரம் சரீர - ஆத்ம உறவையும் விளக்கு கிறது.

'இந்த உயிர்களை எல்லாம் உடலாகக் கொண்டு இருக்கிற நான், உயிர்களுக்குள் உயிராகப் புகுந்து இவற்றிற்குப் பெயர்களையும் உருவங்களையும் உண்டு பண்ணுகிறேன்' (சாந்தோக்யம் 6.3)

பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட இந்த உடல்களிலே உள்ள உயிர்கள் வழியாக இறைவன் உள்ளே புகுந்து இவை பொருளாதல், பெயர் பெறுதல், உண்டாகும்படி செய்தல், மற்றும் இவை எல்லாம் 'தான்' என்னும்படி இருப்பினும், 'உயிர்களுக்குள் வியாபித்து, அவ்வுயிர்களைக் கட்டளை இடுபவனாய், எல்லா உயிர்களுக்கும் தானே உயிராய் (ஆத்மாவாய்) இருக்கிறான்' (தைத்ரீயம்).

மண் குடமாகிறது.

ஆனால் மண்ணே குடமாகிவிடாது. இறைவன் உயிர்களைப்படைத்து, உட்புகுந்து, தாரகனாய் (உயிரைத் தரித்துக் கொண்டிருப்பவனாய் நியாமகனாய் (இதைச் செய், அதைச் செய் என்று ஏவுகிறவனாய்) சேஷியாய் (தன் விருப்பப்படி ஜீவனை ஆட்டிப்படைப்பவனாய்) நினைவு எல்லாவற்றையும் நடத்திக் கொண்டு செல்வதால், சரீர-உயிர் (ஆத்ம) உறவு சொல்லப்பட்டது.

பஞ்ச பூதங்களில் ஆகாயம் என்பது நீர், நெருப்பு, காற்று, மண் ஆகிய ஏனைய நான்கு பூதங்களுக்கும் முன் தோன்றி, அவை அழிந்தபின்னும் சில காலம் நின்று பின்னரே அழியக் கூடியது.

ஆகாயம் என்ற உறுதியான பூதத்தையே அடிப்படியாகக் கொண்டு, ஏனைய பூதங்களான நீர், நெருப்பு, காற்று, பூமி ஆகியவற்றையும் பல்வேறுபட்ட சேர்க்கைகளினால் (PERMUTATIONS AND COMBINATIONs), எல்லா பொருள்களும் படைக்கப்பட்டன.

ஆகாயம் என்பது sky அல்ல space. அதாவது வானமு, நம்மைச்சுற்றியுள்ள எல்லா வெற்றிடங்களும்.

ஆகாயத்தில் 'ஈதர்' என்ற சக்திவாய்ந்த, கண்ணுக்குத் தெரியாத பொருளைக் கண்டுபிடித்து, ரேடியோ, டெலிவிஷன் பொன்ற பல பயனுள்ள பொருள்களை நமக்குக் கொடுத்த விஞ்ஞானிகள், இன்னும் பல விதமான சக்திகள் உறுதிமிக்க ஆகாயத்தில் மறைந்து இருப்பதாகக் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட சக்திக்கு DARK ENERGY, என்றும் அதிலிருந்து உயிர் (GOD'S PARTICLE) என்பது வந்திருக்கலாம் என்கிறார்கள். விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன முடிவே கிடையாது.

ஆனால், ஆழ்வார் தன் ஞான, பக்திகளினாலேயே 'உடல்மிசை உயிரென கரந்தெங்கும் பரந்துளன்' என்று உறுதியாக அருளிச் செய்கிறார்.

"பரம்பொருளிடமிருந்து ஆகாயம் தோன்றியது (தைத்ரீயம்)"

"பல பொருள்களாக விரிகிறேன்" (தைத்ரியஃம்)

இறைவனின் இந்த மலர்ச்சியே இந்தப் பரந்த உலகம். எல்லாப் பொருள்களிலும் தனித்தனியே குறைவு அற நிறைந்து நிற்பவன். ஒவ்வொரு உடலுக்கும் உயிர் எல்லாமாக (தாரகனாய், நியாமகனாய், சேஷியாய்) இருப்பது போன்று, ஒவ்வொரு உயிர்க்கும் இறைவன் எல்லாமாக இருந்து நடத்துகிறான், குறைவு ஏதுமின்றி நிறைந்து நின்று வழிகாட்டுகிறான்.

இறைவன் உயிர்களால் அறிய முடியாதவன் என்று உபநிடதம் (பிரஹறதாரண்யம்) கூறுவது போல், புறக்கண்களால் காணமுடியாதவனாய் இருந்தும், உள்ளும், புறமும் எங்கும் நிறைந்து இருக்கிறான் என்பது சத்தியப்ரமாணம்.

ஒரு அதிகாரியிடம் சலுகை பெற ஒரு வியாபாரி சென்றார். பணம் நிறைந்த பெட்டி ஒன்றைக் கொடுத்தார். வாங்க மறுத்த அதிகாரி, வியாபாரியைப் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்று அந்தப் பெட்டியை வாங்கிக் கொண்டார்.

வியாபாரி விழித்தார்! "ஏன் அந்த அறையில் வாங்க மறுத்தீர்கள்?" என்று கேட்டார்.

அதிகாரி பதிலளித்தார், "அந்த அறையில் சாமி படம் மாட்டியிருக்கே, கவனிக்கலையா?

படங்களிலும் பூஜை அறையிலும் மட்டுமின்றி எங்கும் பகவான் நிறைந்து இருந்து நம் அபராதங்களைக் கண்டும் காணாதவன் போல் இருக்கிறான் என்பது தெரியாதது அறியாமை அன்றோ?

ஆதிகாலத்தில் இறைவன் உயிர், உடல், உலகம் ஆகியவற்றின் ஆராய்ச்சியிலேயே, தியானம் செய்து கொண்டு வாழ்நாளை முழுவதுமாக கழித்து வந்த ரிஷிகள், முனிவர்கள், ஞானிகள், பல பெரியோர்கள், எந்த பயனையும் எதிர்பாராமல், வழிவழியாக, வாயால் சொல்லியும் அவைகளை காதுகளால் கேட்டுச் சொல்லி வந்த 'சுடர்மிகு (ஒளிபொருந்திய) வேதங்கள் (சுருதி)' ஆழ்வாரின் இந்தப் பாசுரத்துக்கு ஆதாரமாக அமைந்தன.

வேதங்கள் (எந்த ஒருவனாலும்) புருஷனால் படைக்கப்பட்டவை அல்ல; எம்பெருமானால் எல்லோரும் பயன்பெற அளிக்கப்பட்டவை. ஆகவே, அவை குற்றமற்றவை; ஒளி மிகுந்தவை.

எப்போதும் ஒரே விதமாய் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டு, உச்சரிக்கப்படும் சப்தங்களின் கூட்டம். ஆகவே, வேதங்கள் வைதீக சப்தம் என்பர். மற்றவை

லௌகீக சப்தம் - புதிது, புதிதான சப்தம். வேதம் 'ஏட்டில் எழுதப்படாமல், ச்ரவண பரம்பரையாக (வாய்வழியாக) சொல்லப்பட்டு வருவதால் சுருதி எனப்பட்டது. ஆரம்ப காலங்களில் வாய் மொழியால், வழிவழியாய் வந்தவை. ஆகவே, ஆழ்வாரின் இப்பாசுரம் 'திடவிசும்பு' என்றாற்போல் மற்றெல்லாவற்றிலும், உறுதியான, வலுவான, பொருள் பொதிந்த அடித்தளம்.

★ ★ ★

(8)

சுரரறிவருநிலை விண்முதல்முழுவதும்
வரன் முதலாயவை முழுதுண்டபரபரன்
புரமொருமூன்றெரித்து அமரர்க்கும் அறிவியந்து
அரனயனென உலகழித்தமைத்துளனே

அழித்தலும் அவன் தொழிலே

முன்னர், படைத்தல், அளித்தல் (காத்தல்) அவன் தொழில் என்றார். இங்கே 'அழித்தலும் அவன் உரிமையே' என்கிறார். அதாவது, படைத்தல், காத்தல் போன்று அழித்தலும் அவன் இட்ட வழக்கு என்கிறார்.

பிரமன் முதலிய தேவர்களாலும் அறிந்து கொள்ள அரிய நிலையுடைய மூலப்பகுதி (மூலப்ரக்ருதி) தொடக்கமாக உள்ள எல்லாவற்றிற்கும் காரணமான எம்பெருமான், உலகம் முழுவதும் உண்டு. அழிக்க வேண்டிய நேரத்தில் அழித்தவன். சிவனாக இருந்து ஒப்பற்ற முப்புரங்களையும் அழித்துப்பின், உலகங்களையெல்லாம் அழித்துப் பின் பிரமனாக இருந்து தேவர்களுக்கு ஞானத்தை உபதேசித்தும், பின்னர் உலகங்களை மீண்டும் படைத்து, எல்லா தேவர்களுக்குள் உயிராய் தங்கி, எல்லாவற்றையும் தானே நடத்துகிறான்.

முன் பாசுரங்களில், வேதங்களால் பேசப்பட்ட துணிந்த பொருள் அவனே என்றும் எல்லா பொருள்களுக்கும் ஆத்மாவாக நிற்பவன் அவனே என்றும் கூறுகிறார்.

அப்படியானால், திரிபுரம் எரித்தவன் சிவன் என்றும், உலகம் படைத்தது பிரமன் என்றும் சொல்கிறார்களே, அப்படியிருக்க எம்பெருமானே எல்லாம் செய்கிறான் என்பது பட்சபாதம் அல்லவா?

அல்ல; பிரமாணங்களை ஆராய்ந்தால், அவை என்ன சொல்கிறதோ, அதைத்தான் சொல்கிறார். தேவர்கள் உட்பட எல்லோர்க்கும் அந்தர்யாமியாக - உள்

உறைபவனாக இருந்து இயக்குகிறான் இறைவன் என்பது பிரமாணம் என்கிறார்.

'மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ'
- திருவாய்மொழி 8-1-5

"மிக்க ஒளியுடைய உருத்திர பகவானுக்குத் திருமால் உயிராக இருக்கின்றார்; ஆதலால், அந்த சிவபெருமானுடைய வில்லின் நாணைத் தொடும் ஆற்றலைக் கொண்டான்" - வியாச முனிவர் - பாரதம் - கர்ண பர்வம்.

"நாராயணன் உலகங்களையெல்லாம் படைப்பதற்கு முன்னர் பிரமனைப் படைத்தவன்; அப்பிரமனுக்கு வேதங்களைக் கற்பித்தான்" -சுவேதாஸ்வதரம்

"பிரமன், சிவன் என்னும் இவர்கள் இருவரும் தேவர்களுக்குள் தலைமை பெற்றவர்கள்; இறைவன் தெளிந்திருந்த காலத்திலும், கோபத்துடன் இருந்த காலத்திலும் உண்டானவர்களாக எண்ணப்படுகிறார்கள். இவர்கள் அவ்விறைவனால் காட்டப்பட்ட வழிகளை உடையவர்களாய் படைத்தல், அழித்தல் ஆகிய காரியங்களைச் செய்கிறார்கள்" - பாரதம் - சாந்தி பர்வம் 169.

★ ★ ★

(9)

உளனெனிலுளன் அவனுருவமிவ்வுருவுகள்
உளனலனெனில் அவனருவமிவ்வருவுகள்
உளனெனவிலனென இவைகுணமுடைமையின்
உளனிருதகைமையோடு ஒழிவிலன்பரந்தே

உளனோ ? அலனோ ?

இறைவன் உளன் என்றால் உள்ளவன் ஆகிறான். அப்போது உருவத்தோடு இருக்கும் பொருள்கள் எல்லாம் அவனுடைய தூல சரீரமாகும். இறைவன் இலன் என்றாலும் உள்ளவன் ஆகிறான்; எப்படியெனில், அப்போது உருவம் இல்லாததாய் இருக்கும் பொருள்கள் எல்லாம் அவனுடைய சூட்சும சரீரமாகும். ஆதலால், உளன் என்றும், இலன் என்றும் கூறப்படும் இவற்றைக் குணமாகக் கொண்டவனும், உருவமும், அருவமும் ஆன தூல, சூட்சுமப் பொருள்களையுடையவனாய் எங்கும் ஒழிவு இல்லாதவனாகிப் (நீங்காதவனாகி) பரந்து இருக்கின்றவனே ஆவான் இறைவன்.

சர்வ சூந்யவாதியை மறுக்கிறார். அதாவது, இறைவன், குணங்கள், மேம்பட்டவன் முதலிய எதுவுமே இல்லை என்ற கொள்கையுடையவர்களை மறுத்துப் பேசுகிறார்.

எல்லாம் உள்ளவை என்று கூறின் எப்பொருள் தோன்றுமோ, அப்பொருளே எல்லாம் இல்லை என்று கூறினும் தோன்றும்.

'இங்கே குடம் இருக்கிறது' எனின் மண்ணின் நிலைமை வேறுபாடு தோன்றும். அதாவது, முன்பு மண்ணாய் இருந்த பொருள் இப்போது குடமாகிய வேறு நிலையைப் பெற்றுள்ளது. 'குடம் உடைந்தது' எனின் குடம் என்னும் காரிய நிலையை விட்டு, மண்ணாகிய காரண நிலையாய் மாறிவிட்டது என்பது தெரிகிறது.

ஆகவே, எவ்வகையிலும், எவ்வகைச் சொல்லாலும் அடியோடு இல்லாமை என்பது கிடைக்காது.

அப்படியானால் 'முயற் கொம்பு இல்லை' 'ஆகாயத்தாமரை இல்லை' என்ற இடங்களில் முழுதும் இன்மை தெரிகிறதே? இவ்விடங்களில் வேறொரு நிலைமை அடையும் தன்மை கூறமுடியாதே?

பதில்; இச்சொற்களாலும் முழுதும் இன்மை ஒரு போதும் கிடைக்காது. 'எப்படி?' என்றால் 'முயற்கொம்பு இல்லை' என்றால் முயல் இல்லை, கொம்பு இல்லை என்பது சரியாகுமோ? முயலுக்கும், கொம்புக்கும் சம்பந்தம் இல்லாதது தெளிவுபடுமே தவிர, அப்பொருள்களே இல்லை என்பது ஒரு போதும் கூற முடியாது. ஆகவே, சர்வ சூன்ய வாதம் ஒரு போதும் சரியாகாது.

<u>உளன் எனில் உளன்</u>:- நான் உளன் என்று சொல்வது போல், சொல்லில்தான் உளன். இறைவனை மறுப்பவன், இறைவன் எனும் உண்மைக்கு இசைய மாட்டான் என்பதால் 'உளன் எனில்' என்கிறார்.

<u>அவன் உருவம் இவ்வுருவுகள்</u>:- இறைவன் உளன். ஆனால், அவனால் நியமிக்கப் படுகின்ற இவ்வுலகத்தோடு அவன் கூடியே இருத்தல் வேண்டும். "எவன் ஒருவனுக்கு உயிர்கள் எல்லாம் சரீரம்? எவன் ஒருவனுக்கு இந்த உலகம் சரீரம்?" என்று பிரமாணங்கள் இறைவனைக் கூறுவதால், உயிர்களும், உலகமும் அவனுக்கு உரிமைப்பட்டு அவனுடன் சேர்ந்து உள்ளன.

<u>உளன் அலன் என்பாயோ?</u>

அப்போதும் அவன் "இன்மை" என்னும் தர்மத்தையுடையவனாய்த் தோன்றுவான். அப்போது, "இல்லை" என்ற ABSTRACT பொருளாய் வேறொரு தன்மையினை அடைந்ததாய்க் கொண்டு இவற்றின் 'அன்மை' தோன்றும். உதாரணமாக, 'குடம் இருக்கிறது' என்றால் வாயும் வயிருமான உருவம் தோன்றும்; 'குடம் இல்லை' என்றால், இல்லை என்ற தர்மத்தோடு கூடியதாய், வேறொரு வகையால் அது தோன்றும்; அதாவது, இங்கு

இல்லை என்றால் வேறு ஒரு இடத்தில் உண்டு; இப்போது இல்லை என்றால் வேறு ஒரு காலத்தில் உண்டு. குடமாக இல்லை என்றால் மண்ணாக இருக்கும். எங்கும், எப்போதும், ஒரு வகையாலும் குடம் இல்லை என்பது சரியாகாது.

இறைவன் உளன், இலன் ஆகிய இரு குணங்களையும் உடையவனானதாலே, இவை இரண்டும், இரண்டு தர்மங்களாயின.

- இறைவன் 'உளன்' என்ற சொல்லாலும், 'இலன்' என்ற சொல்லாலும், சொன்ன இருதன்மையாலும் உளன் ஆனான்.

-நான் உளன் என்ற சொல்லாலே உண்மையைச் சாதித்தேன்; நீ இலன் என்ற சொல்லாலே உண்மையைச் சாதித்தாய்; ஆக, இருவருமே 'இறைவன்' என்பவனை நினைத்துப் பேசினோம்;

இருவருமே உண்மையைச் சாதித்தோம்.

உயிர் என்ற ஒன்று உண்டா, இல்லையா? என்பது போன்று, இறைவன் உள்ளானா? அல்லது, அவன் இல்லவே இல்லையா? ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாத்திகவாதம் இருந்து வந்திருக்கிறது; இனியும் இருக்கும். 'இருக்கிறான்' என்பது ஒரு நம்பிக்கை. 'இல்லை' என்பதும் ஒரு நம்பிக்கை. ஆத்திகன், நாத்திகன், ஆத்திக நாத்திகன் என்று மனிதர்கள் மூவகைப்பட்டவர். அவர்களில் ஆத்திகன் என்பவன் நாத்திகன், ஆத்திக நாத்திகன் ஆகிய இருவரிடமிருந்து விலகி தன் வழி செல்ல வேண்டும் என்றார் மணவாள மாமுனிகள். கடவுளைப் பற்றிய அறிவு இல்லாமல் இருப்பினும், நமக்கு மேல் ஓர் சக்தி உள்ளது, எல்லாம் அவனே பார்த்துக் கொள்வான் என்ற திட நம்பிக்கையுடன் தங்கள் கடமைகளைச் சரிவர செய்யும் மக்களும் ஆத்திகர்கள்தான். ஆனால் தினந்தோறும் திருவாராதனை செய்து, திருமண் காப்பு அணிந்து, கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபாடு செய்து கொண்டு, அதே சமயத்தில் அந்த இறைவன் விதித்த சட்டதிட்டங்களை (சாத்திரங்களை) மீறி, சமுதாயத்திற்குத்

தீங்கு விளைவித்துக் கொண்டு திரிகிறவர்கள் ஆத்திகர்களா? ஆத்திக நாத்திகரா?

"மெய்யனாகும் விரும்பித் தொழுவார்க்கெல்லாம், பொய்யனாகும் புறமே தொழுவார்க்கெல்லாம்" என்பது ஆழ்வார் வாக்கு.

★ ★ ★

(10)

பரந்ததண்பரவையுள் நீர்தொறும்பரந்துளன்
பரந்தவண்டமிதென் நிலவிசும்பொழிவற
கரந்தசிலிடந்தொறும் இடந்திகழ்பொருடொறும்
கரந்தெங்கும்பரந்துளன் இவையுண்டகரனே

விரிந்து, பரந்து, நிறைந்து - பிரமிப்பின் எல்லை

உலகங்களையெல்லாம் பிரளய காலத்தில் விழுங்கிக் காத்த இறைவன், பரந்திருக்கின்ற சமுத்திரத்திலுள்ள நீர்த்துளிகளில் எல்லாம் இருந்து எங்கும் பரந்து, பரந்திருக்கும் அண்டமோ இது என பிரமிக்கும் வண்ணம் பரந்திருக்கிறான். அவ்வாறே, பூமி, ஆகாயம் முழுதும் பரந்து நிறைந்திருக்கிறான். மிகவும் சூட்சமமான உடலிலும், உடலில் வசிக்கின்ற உயிரிலும் கண்களுக்குப் புலப்படாமல் பரந்திருக்கிறான்.

உடலின் சேர்க்கையால், உயிருக்குக் குறைவு வருவது போல், உடல், உயிரில் சேர்ந்து உறையும் இறைவனுக்குக் குறை வருமோ? என்றால் வராது. "குறைவு அற நிறைந்து நிற்பவன் என்று விரிந்து, பரந்து நிற்கும் இறைவனின் தன்மையை விளக்குகிறார்.

ஆகாயத்தை விடப் பெரியவன் என்று கூறப்படும் பரம்பொருள், தண்ணீரின் பரமாணுக்களில் நிறைந்து நின்றால், சிறிய இடத்தில் இருப்பதால் நெருக்கப்பட்டு இருப்பானோ? அல்ல. ஏனெனில், அந்த ஒவ்வொரு பரமாணுவாக இருக்கும் நீர்த்துளியும், இது பரந்த அண்டமோ என்னும்படி அதற்குள் பரந்திருப்பன். அதாவது, மிகப் பெரிய உலகம் (கண்டம்) படைத்து, அதனுள் ஒருவனைத் தனியாக வைத்தது போன்று இருப்பான்.

தண்ணீரில் மட்டுமல்லாமல், பூமி, ஆகாயம் முழுவதும் அதே போன்று பரந்திருக்கின்றான்; நிறைவாக

நிற்கிறான். இங்கே சொல்லப்படாத காற்று, நெருப்பு என்னும் எஞ்சிய பூதங்களிலும் உள்ளான் என்பது உபலட்சண விதி (முக்கியமானவற்றைக் கூறிடில், எஞ்சியவை அனுமானம்)

ஆக, ஐம்பெரும் பூதங்களாலும் அமைந்த உலகங்கள் முழுவதும் இறைவன் பரந்து நிறைந்துள்ளான்.

அது மட்டுமா?

கரந்த சில இடந்தோறும்;- இமையோடு இமை பொருந்தும் போதைக் காற்றிலே முடியும்படியாக நுட்பமான சரீரந்தோறும்.

அந்தந்த சரீரங்களில் ஞான ஆனந்தங்களோடு கூடிமிளிருகிற ஆத்துமா தோறும், தான் நிறைந்திருக்கும் அந்தப் பொருளுக்குத் தெரியாதவாறு மறைந்து உயிர் உடலில் நிறையும்போது, அவ்வுயிர் அவ்வுடலில் ஓரிடத்திலிருந்து ஞானத்தால் எங்கும் நிறையக் கூடியதாய் இருக்கும். இறைவன், அவ்வாறு அன்றித் தன் சொரூபத்தாலேயே நிறைந்திருப்பான்.

அணுவின் தன்மையுடைய உயிருக்குள் எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் எப்படி குறைவு இன்றி நிறைந்திருப்பான்?

"தயிர் உண்ட பொன்வயிறு இவ்வேழ் உலகும் உண்டும் இடம் உடைத்தால்" (பெரியதிருமொழி *11.5.3.*) என்கிறபடியே ஆற்றல் உடைய இறைவனுக்குக் குறைவு எப்படி வரும்?

★ ★ ★

(11)

கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை
வரனவில்திறல்வலி அளிபொறையாய் நின்ற
பரனடிமேல் குருகூர்ச்சடகோபன் சொல்
நிரனிறையாயிரத்து இவைபத்தும்வீடே

பலன் - அழிவில்லாத பேரின்ப மோக்ஷம்

அவன் திடமிக்க பிரமாணங்களால் உறுதி செய்யப்பட்டவன். திடமான ஆகாயமும், நெருப்பும், காற்றும், தண்ணீரும், மண்ணும் என்னும் இவற்றின் தன்மைகளான சிறந்த ஒலியும், தென்றலும், வலியும், தண்ணொளியும், பொறுத்தலும் ஆகிய இவையாகி நின்ற இறைவனுடைய திருவடிகளின் மேல் திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீசடகோபர் அருளிச்செய்த, முறை முறையாக நிறுத்தப்பட்ட ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப்பத்து பாசுரங்களும் அந்தமில் பேரின்பத்து அழிவில்லாத வீடு எனப்படும் மோட்சத்தை அளிக்கவல்லது.

வேர் இன்றி மரம் உண்டோ? ஆழ்வார் அருளிச் செயல் அன்றி வீடு எனும் மோட்சம் கிடைக்குமோ? உயர்வு அற உயர் நலம் உடையவனைக் காண வேண்டுமானால் ஆழ்வாரின் இறைவனைப் பற்றிய அறிவுரையை நன்றாகப் புரிந்து கொண்டு அவர் காட்டிய வழியில் சென்றால் இறைவனைக் காணலாம்.

ஆழ்வார் காட்டும் வழிதான் என்னவோ?

★ ★ ★

முதல் பத்து - இரண்டாம் திருவாய்மொழி

2(1)

வீடுமின்முற்றவும் வீடு செய்து உம்முயிர்
வீடுடையானிடை வீடு செய்ம்மினே

விடுக - பற்றுக

இறைவனைத் தவிர வேறு பொருள்களிடத்தில் உள்ள ஆசை முழுவதையும் விட்டு விடுங்கள்; அவ்வாறு விட்டு விட்டு, உம்முடைய உயிரை அதற்கு உரியவனான இறைவனிடம் சேர்த்து விடுங்கள்.

ஏனைய பொருள்களை விட்டு, உங்களுக்காக உள்ள இலக்கைப் பற்ற முயற்சியுங்கள்.

எம்பெருமானிடமிருந்து வந்தவர்கள் நாம். நமக்காக ஏங்குகின்ற தாயும் தந்தையும் அவனே. அவனுக்காகத் துடிக்கும் உயிர்கள் மீண்டும் அவனைச் சேர்தல் அவைகளின் குறிக்கோள். மற்றவைகளின் மீது கொண்ட ஆசைகளை முதலில் விட்டால்தான் அவனைப் பற்ற முடியும்.

சிறு குழந்தை பாம்பைப் பிடித்துக் கொண்டிருந்தால், 'போட்டுவிடு' என்று முதலில் சொல்லிப் பின் 'பாம்பு கடிக்கும்' என்கிறோம். தீப்பிடித்து எரியும் வீட்டிலுள்ளோரை 'வெளியே வா' என்று முதலில் கூவுகிறோம். அதைப் போன்றே நாம் இறுகப் பற்றியிருக்கும் அற்ப ஆசைகள் நம் இலக்கைச் சேர மிகப் பெரிய தடைக் கற்கள். ஆகவே, அவைகளை 'விட்டுவிடுங்கள்' என்று உபதேசம் செய்கிறார் ஆழ்வார். ஆச்சார்யன் ஆணையாகவே அதை ஏற்போம்.

"புத்திரர்களையும் மனைவியையும் விட்டுவிட்டு ஸ்ரீராகவனைச் சரணமாக அடைகிறேன்" (ஸ்ரீராமாயணம், யுத்த காண்டம், *17:14*) என்றும், "என்னால் விடப்பட்டது

இலங்கை" (ஸ்ரீராமாயணம், யுத்த காண்டம் *19:5*) என்றும் விபீஷணாழ்வான் ஸ்ரீராமனைப் பற்றுவதற்கு முன் "விடுகை"யைத் தான் குறிப்பிட்டான்.

ஐம்புலன்களையும் அடக்கி வாழ்பவனுக்கு ஆழ்வார் உபதேசிக்கவில்லை. இந்த உலக வாழ்க்கையின் வெப்பத்தை இன்பம் என எண்ணிச் சுவைத்துக் கொண்டு காலம் தள்ளும் சம்சாரிகளில், யாரேனும் ஒருவருக்காவது இறைவனைப் பற்றிய சுவை பிறக்காதா என்று நினைத்து எல்லோர்க்கும் பொதுவாக உபதேசிக்கிறார்.

ஆசைகளை விடுகை என்பதற்கு ஆட்சேபனை இக்காலத்தில் எழும்.

தேகமும், அதில் கைகால்கள் போன்ற கரணங்களும்,மனமும், ஐம்புலன்களும் இறைவனால் எதற்காகப் படைக்கப்பட்டன?

ஆசைகள் இயற்கையாக எழுகின்றன. அவைகளை அடக்கு, நீக்கு என்பது எப்படி நியாயம் ஆகும் ?

ஆடு மாடுகளும், ஏனைய விலங்குகளும் இயற்கையை ஒட்டி வாழ்ந்து, ஐம்புலன்கள் வழி செல்கின்றனவே என்றெல்லாம் வாதம் செய்யப்படுகிறது.

ஆனால், மனிதனுக்கு ஆறாவது அறிவு எம்பெருமான் அருளியிருக்கிறார்.

வேத சாத்திரங்களைப் படைத்து, செய்ய வேண்டியவை என்ன, விலக்கப்பட வேண்டியவை என்ன என்பது விதிக்கப்பட்டிருக்கிறது.

அறிவின் மூலம் அதைத் தெரிந்து கொண்டு ஐம்புலன்களின் ஆட்சிக்கு மன உறுதியின் மூலம் கடிவாளம் போட்டுக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்வதே, மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள வேறுபாடு.

அதைத்தான் இறைவனும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறான்.

பிரம்மசர்யம், கிருஹஸ்தாஸ்ரமம், வானப்ரஸ்தம், சந்நியாசம் என்று மனித வாழ்க்கையை நான்கு

நிலைகளாகப் பிரித்து ஒவ்வொரு நிலையிலும் எப்படி வாழ வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. அது ஒரு ஒழுங்கு முறை; நியதி. இறைவனை முறைப்படி சேர ஓர் வழிகாட்டி.

ஆனால் நடப்பது என்ன?

ஐம்பதைத்தாண்டியவர்கள், வழிகாட்டிகளாக இருக்க வேண்டியவர்கள், சிலர் கடமைகள் மறந்து பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதால்தான் இளைஞர்கள் திசை திரும்புகின்றனர்.

கூரத்தாழ்வான் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இராமாநுஜரிடம் சேர்ந்தார். ஆனால், நம்மில் பெரும்பான்மையினர், மிகச் சிறிய அளவு விட்டுவிட்டு பெரும் அளவு உலக வாழ்க்கையைச் சுவைக்க வைத்துக் கொண்டு, இறைவன் அருள் புரியவில்லையே என்று அவனையே குறை கூறுகின்றோம். அத்துடன் நில்லாமல், "நாங்கள் எவ்வளவோ தானம் செய்தோம். பல ஆசைகளை (வயதான காலத்தில் உடல் வலுவு இல்லாமல்) விட்டுவிட்டோம்" என்ற தற்பெருமைகளுக்குக் குறைவில்லை.

விட்டு விடல் என்பதே பெரிய சாதனை. பின்னர்தான் பற்றுதல். ஆகவே "வீடு செய்து" (விட்டுவிட்டு) என்று கூறுகிறார். சிறையில் இருக்கும் ராஜகுமாரன் விடுபடுவதுதான் முக்கியம். பின்னர் தான் முடி சூடி ராஜ்யம் ஆள்வது எல்லாம்.

உயிர்களும், உலகமும், இறைவனின் சரீரம்; அவன் சொத்து, ஆகவே 'உம் உயிரையும், அந்த உயிருக்கு வீடாக உள்ள சரீரத்தையும், அவைகளுக்கு உரியவனிடத்தில் சேர்த்து விடுங்கள்' என்கிறார் (அல்லது) 'உம் உயிரைத் தன் சரீரமாக உடைய இறைவனிடத்தில் சேருங்கள்'. (அல்லது) 'உம் உயிரை சமர்ப்பித்தல் உடையவனித்திலே.' (அல்லது) 'உம் உயிரை வீட்டினை (மோட்சத்தை) உடையவனிடத்தில் சேருங்கள் என்றெல்லாம் பொருள் கூறுவர்.

தானாகவே அழிந்து போகின்ற தேகத்தைச் சொல்லாமல், உயிரை மட்டுமே கூறுகிறார். 'உடையவனிடத்தில்' என்கிறாரே. யார் அந்த உடையவன்? என்று ஆவலாக நாம் கேட்க, விடை பத்தாவது பாசுரத்தில் "வண்புகழ் நாரணன்" என்று அருளிச் செய்கிறார்.

<u>வீடு செய்மின்:</u> அவன் உங்கள் உயிருக்குச் சொந்தக் காரன். அந்த உயிரை அவன் தன்னிடம் மீண்டும் வந்து சேர ஏக்கத்துடன் நோக்கிக் கொண்டிருக்கிறான். எந்த விவாதமும் இன்றி, வீணான எதிர்ப்பின்றி, மரியாதையாக உங்கள் உயிரை அவனிடம் சமர்ப்பிக்க இசைந்து விடுங்கள்.

இதனால் என்ன பலன்? (என்ன இலாபம்?) சம்சார வாழ்க்கையில், "நான், என்னுடையது" என்ற செருக்குடன் செய்த பல தீவினைகள் (அறிந்தும், அறியாமலும் புரிந்த) தீய செயல்கள், இன்னும் பல சன்மங்கள் பிறந்து இந்தக் கடனைத் தீர்க்க முடியாமல் திணறும் சம்சாரிக்கு ஒரே வழி - பிராயச்சித்தம் - இறைவனுக்குச் சொந்தமான உயிரை அவனிடத்தில் எந்தத் தயக்கமும் இல்லாமல் சுமுகமாகச் சேர்த்து விடுவதே.

'உயிர்', இறைவன் அளித்த பொருள்களில் மிகச் சிறந்தது. அது எப்படியும் உடலைவிட்டு நீங்கப் போகிறது. அந்த உயிரை மிகவும் மகிழ்ச்சியுடன், இசைந்து, அவனிடம் சமர்ப்பியுங்களேன்; உயிருக்கு வேறு கதி இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

அமைதியாக, எந்தச் சஞ்சலமுமின்றி, அதை அவனிடம் அளித்து விடுங்கள்.

ஆழ்வார், ஏதோ உடனே நம் உயிரை விட்டுவிடச் சொல்கிறார் என்று அஞ்சுதல் வேண்டாம். பகவானிடம் பக்தியை இடைவெளி இல்லாமல் தொடர்ந்து செலுத்துங்கள்.

"மரணமானால்" (மட்டுமே) வைகுந்தம் கொடுக்கும் பிரான்' என்று ஆழ்வாரே அருளியுள்ளார் (-திருவாய் 9-10). ஆகவே தயங்க வேண்டாம்.

உடலைவிட்டு உயிர் தானாக பிரியும்போது, அவன் சொத்தை அவனிடம் ஆனந்தமாகவும் திருப்தியுடன் சமர்ப்பிக்கிறோம் என்று நினைப்போம்.

"குறித்த ஒரு சிலரை மட்டும் நியமிக்கின்ற யமனையும் நியமிக்கின்றவன் இறைவன். ஆனால் யமன் 'சுடு, சுட்டுப் பொசுக்கு' என்று கூறுதலைப் போன்று அன்றி, எல்லோர்க்கும் இனிமையே செய்கின்றவனும், 'அந்தர்யாமிப் பிரஹ்மணத்தில்' கூறப்படும் ஏற்றத்தை உடையவனாயும் இருக்கும் விஷ்ணு உன் மனத்திலே இருக்கின்றான். அவனோடு (உயிர் என்னுடையது, உன்னுடையதல்ல என்ற) விவாதம் இன்றி இருந்தால் போதும். அதுவே உனக்குப் பேற்றினை (பலனை) அளிக்கவல்லது. பலன் எதிர்பார்த்து புண்ணியத்தலங்கள் தேடிப் போக வேண்டாம்" (மனு - ஸ்மிருதி, 8,92)

PEACEFUL AND SMOOTH TRANSITION - RECONNECTION WITH SOURCE.

★ ★ ★

2(2)

மின்னின்நிலையில மன்னுயிராக்கைகள் என்னுமிடத்து இறையுன்னுமினீரே

ஏன் விடவேண்டும்?

உயிர்கள் நிலை பெற்றவை. ஆனால், அந்த உயிர்கள் தங்கியிருக்கும் உடல்களோ, தோன்றி மறையும் மின்னல்களைக் காட்டிலும் வேகமாகத் தோன்றி அழியக் கூடியவை. நீங்களே இதைச் சற்று நினைத்துப் பாருங்கள்.

இறைவனைத் தவிர ஏனையவற்றை விட்டுவிடுங்கள் என்றார் முன்பாட்டில். அது எப்படி சாத்தியம்? 'காலம் காலமாக அனுபவித்து வந்த வாசனை அனுபவங்களை எப்படி விட முடியும்?' என்று சம்சாரி கேட்க, 'காலம் காலமாக அனுபவித்து வந்தவையில் உள்ள குற்றம் குறைகளைக் கண்டால் உணர்ந்து, திருந்தி அவைகளை விட்டு விடலாமே!' என்கிறார்.

"நல்ல வாசனை, குளிர்த்தி, மென்மையை உணர்கிறேன்". என்று எண்ணி ஒருவன் பாம்பின் மீது கைவைத்து உறங்கினால், அவன் நண்பன், "பாம்பு! பாம்பு! பாம்பின் மேல் கை வைத்திருக்கிறாய்!" என்று சத்தம் போட்டு உணர்த்தினால், உறங்குபவன் அலறிக் கொண்டு கையை எடுத்துவிட்டு ஓடமாட்டானா?

அதே போன்று, உலக விஷயங்கள் இன்பம் உடையது என்று எண்ணியிருப்பவனிடம் 'அவை அற்பம், நிலையற்றவை' என்று அவைகளின் குற்றங்களைச் சொன்னால், அவனும் அவைகளை விட்டு விடுவான் என்பதை 'மின்னின் நிலையில' என்று அருளுகிறார்.

நிலையுள்ள உயிருடன் நிலையற்ற சரீரம் பொருந்தியிருக்கிறது.

அந்த உயிர், திறந்து கிடக்கும் வாயில்கள் தோறும் நுழையும் ஐந்து போன்றது. ஓர் உயிரே பல சரீரங்களை எடுப்பதால், “உயிர் யாக்கைகள்” என்கிறார்

எப்படி?

ஓர் உயிர் அதன் கர்மங்களுக்குத் தக்க தேவர் சரீரம், மனித சரீரம், மிருக சரீரம் போன்ற பல சரீரங்களை பலவாறாக மேற் கொள்கிறது.

அளவிட்டு அறிய முடியாதபடி சம்சாரியின் குற்றங்களின் மிகுதி இருக்கின்றது.

ஒரு சமயம் நண்பர் என்னிடம் கோபித்துக் கொண்டார். “நாள் முழுதும் கணவன், அல்லது கணவனும் மனைவியும் வெளியே சென்று உழைத்துவிட்டு வீடு திரும்பியதும், குழந்தைகளுடன் சேர்ந்து கொஞ்சுதலும், குலவுதலும், ஓட்டல், சினிமா போவதும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் குடும்பத்துடன் சேர்ந்து பார்த்து மகிழ்வதும் கால மாற்றத்தால் கிடைத்த சுகமான அனுபவங்கள். இவைகள் சம்சாரத்தின் குற்றங்கள் ஆகுமா? கோவிலுக்கு போங்கள், உபந்யாசம், காலட்சேபம் கேளுங்கள் என்று புத்தி சொல்வது, பழங்காலத்துக்கு, பின்னோக்கிப் போ என்பதாக இருக்கிறதே! காலத்துக்கு ஏற்றாற்போல மாற வேண்டாமா?” என்று கேட்டார்.

அடியேன் சொன்னேன், “ஒப்புக் கொள்கிறேன். விஞ்ஞானத்தால் ஏற்பட்ட சவுகரியங்களை நாம் ஏற்றுக் கொள்கிறோம். மின் விசிறி, குளிர்சாதனப் பெட்டி, சமையல் அறை சவுகரியங்கள், கார் போன்ற வாகனங்கள் ஆகிய பல நல்லவற்றை விஞ்ஞானம் கொடுத்துள்ளது. ஆனால் எல்லாமே தேக சுகத்துக்காக ஏற்பட்டவையே. வைணவத்தில், தேகம் - உயிர் என்ற இரண்டுமே பேணப்பட வேண்டியவை. அப்படியிருக்க, தேக சுகத்திற்காக, ஆத்மாவுக்குச் (உயிருக்கு) செய்ய வேண்டிய கடமைகளைப் புறக்கணிக்கலாமா? நற்கதி அடைய வேண்டிய உயிர் பாதிப்படைவதைக் கவனிக்க வேண்டாமா? மின்னலைப் போல் தோன்றி மறையும்

உடலை மேலும் வேகமாக அழிக்க வேண்டுமா? அதனால் உயிர் சேதமடையாதோ?

உண்மையான மகிழ்ச்சி எது என்று தெரியாமல் பாழாய்ப் போகிறீர்களே என்றுதானே ஆழ்வார் உபதேசம் செய்கிறார்? "எங்கள் மனம் போனபடி செல்வோம்; ஆனால் இறைவன் அருள் எங்களுக்கு வேண்டும்" என்பது அறியாமை அல்லவா? பலவாறாக எடுத்துச் சொன்னாலும்; அறிவு புகுந்து விடாமல் மனக்கதவுகளை இறுக்கமாக மூடிக் கொள்பவர்கள் தானாகத்தான் திருந்துவார்கள். அதற்கும் இறைவன் அருள் வேண்டுமே!

ஆகவே, அழியக் கூடிய, குற்றங்கள் நிறைந்த இந்த உடல் அற்பமானது; இதை நீரே உணர்ந்து கொள்ளுங்கள். இதற்கு எந்தப் பிரமாணமும் (வேதங்கள் ஆதாரமும்,), ஆசார்ய உபதேசமும் தேவையில்லை. (தோஷம் ப்ரத்யக்ஷமாதலால்) உங்களுக்கே தெரியுமே!

பன்னீராயிரப்படி உரை:- மின்னலைப் போன்று உடலும் தோன்றி அழியக்கூடியதென்பதால், இருக்கும் குறுகிய காலத்தில் எம்பெருமானை மனனம் பண்ணுங்கள்.

★ ★ ★

2(3)

நீர்நுமது என்றிவை வேர் முதல் மாய்த்து இறை சேர்மின் உயிர்க்கு அதனேர்நிறையில்லே

விடவேண்டியதில் எவை முக்கியம்?

"நான், என்னுடையது" என்னும் செருக்கை (அகங்கார, மமகாரத்தை) வேருடன் அழித்து, இறைவனை அடையுங்கள். அவ்வாறு உயிர் இறைவனைச் சேர்வதற்குச் சமமானதாகவோ, அதைவிட மிஞ்சிய வழியோ வேறு ஏதும் இல்லை.

"உலக வாழ்வில் இருக்கின்ற குற்றங்களைத் தெரிந்து கொண்டவுடன் விடலாம் என்றீர்; ஆனால், காலமோ அனாதி (ஆரம்பமும், முடிவும் இல்லாதது), வாழும் காலத்தில் சேர்ந்து விட்ட வினைகளும் ஏராளம்; எவ்வளவு காலங்கள் ஆனாலும் இந்த வினைகள் எல்லாம் நீங்குமோ?" என்ற கேள்விக்கு ஓர் எளிய வழியை உபதேசிக்கிறார்.

விட வேண்டியவைகளில் எவை மிக முக்கியமானவை?

"நான் சக்கரவர்த்தி, பல மன்னர்கள் எனக்குக் கப்பம் கட்டுகிறார்கள். என்னை யாரும் அசைக்க முடியாது" என்று இறுமாந்திருந்தவர்கள் இராஜ்யத்தை இழந்து, ஓடி ஒளிந்து, வறுமையில் வாடியுள்ளார்கள்; "கருநாய் கவர்ந்த காலர்" களானார்கள். *(4-4-1)*

இன்றும், ஜனநாயக ஆட்சிகளிலும், அகங்காரங்கள், செருக்குகள் மண்ணோடு, மண்ணாகப் போனதைக் கண்டிருக்கிறோம். வீட்டிலும், நாட்டிலும் இந்த "நான்" என்கிற அகந்தை, மமதை, செருக்கு, கர்வம், தலை விரித்தாடுகின்றது. "நான்" என்ற சாதாரண உணர்வுடன்தான் யாரும் கடமையை ஆற்ற முடியும், வேலை செய்ய முடியும். ஆனால் 'நான் செய்தேன்' என்ற செருக்கு தான் அழிவுக்குக் காரணம் ஆகிறது. "நான் இன்று

இரண்டுமணி நேரம் பூஜை செய்தேன்” என்று பெருமையுடன் பேசுவோரைக் கண்டிருக்கிறோம். “நான் டெல்லியிலிருந்து வந்தேன்” என்று சொல்லாமல், “நான் டெல்லியிலிருந்து விமானத்தில் வந்தேன்” என்று தன் பெருமையைச் சொல்பவரும் உண்டு. இதெல்லாம் பரவாயில்லை; பொறுத்துக் கொள்ளலாம். “நான்தான் என் வீட்டையே தாங்குகிறேன். நான்தான் என் அலுவலகத்தில் தூண் போல; நான் இல்லையானால் இந்த நாடு பாழாய் போய்விடும்.” என்றெல்லாம் அகங்காரத்தில் அலைபவர்களின் அறியாமை எப்போது போகுமோ?

“நான், எனது” என்கிற அகங்காரம், மமகாரம் சம்சார நோய்க்கு வித்து, ‘வேர் முதல் மாய்த்து” என்பது மருந்து. நோயையும் சொல்லி, மருந்தையும் சொல்கிறார் ஆழ்வார்.

பிறர்க்கு உபதேசம் செய்வதால், ‘நீர் நுமது’ என்று கூறுகிறார். மேலும், தன் திருவாயால் “நான் எனது” என்று கூற விருப்பமற்று அப்படிக் கூறுகிறார்.

உயிர் இறைவனுக்கு அடிமை; தனக்குத்தானே உரிமை கொண்டாடும் சுதந்திரம் அதற்கு இல்லை. அந்த இல்லாத சுதந்திரத்தை, அதனில் ஏற்றிக் கூறுதல் நீங்க வேண்டும். இறைவனின் சுதந்திரத்தை நீக்கி, இராவணன் போன்றோர் ‘நான்’ என்று கூறி கேட்டினை அடைந்தது போன்று, அகந்தை உடைய உயிர்க்கும் கேடு விளையும்.

உயிர்ப் பொருளைக் காட்டுகின்ற ‘நான்’ என்ற சொல்லால் சரீரத்தைக் கூறக் கூடாது. ஆகவே, ‘சரீரத்தில் அகம் புத்தி பண்ணுவது தவிர்க்கப் பட வேண்டும்’ எனப்படுகிறது.

ஆக, இறுமாப்புடன் கூறுகிற ‘நான்’ என்பதும், சரீரத்தைக் கூறும் நான் என்பதும் தவிர்க்கப் பட வேண்டும்.

‘வேர் முதல் மாய்த்து’ என்பது, தேகம் உறுதிப் பொருள் அன்று என்னும் நினைவு உண்டாதலால் விளைகிறது.

'யான்' என்னும் செருக்கு விடத்தக்கது என்னும் நினைவு உண்டானாலே, தானாகவே கொடிய சம்சாரம் அடி அற்று நிற்கும்.

"உயிர் அல்லாத சரீரத்தை உயிர் என்று நினைப்பதும், தன்னைச் சார்ந்தன அல்லாதவைகளை தன்னுடையவை என்னும் புத்தியும், அறிவின்மையாகிற மரத்தைத் தோன்றச் செய்யும் இரண்டு விதைகளாக இருக்கின்றன" (விஷ்ணு புராணம்)

"அடியார்களை நழுவ விடாத அச்சுதனே! நான் உனக்கு அடியவனாய் இருக்கும் அறிவானது, பிறப்பினை மாற்றுதற்கு மருந்தாக இருக்கின்றது" - விஷ்ணு புராணம்.

'நான், என்னுடையது' என்கிற செருக்கை விட்டு உயிர் இறைவனிடம் சேர்தல் என்ற வழிக்கு சமமானதோ, மிஞ்சியதோ வேறு எதுவும் இல்லை. சம்சாரி இறைவனை அடைதல், கெடுமரக்கலம் கரை சேர்ந்தது போல இருப்பதால் 'சேர்மின்' என்கிறார்.

ஆத்துமா (உயிர்) ஞான, ஆனந்தங்களை இலக்கணமாக உடையது. அதற்கு ஹிதமாகவும், பிரியமாகவும் இருக்கும் இந்த வழிக்கு ஒப்பானதும், மிக்கதும் இல்லை.

"பிறப்பாகிய பெருங்கடலில் மூழ்கினவர்களால், ஐம்புலன்களாகிற நீர் வாழ் பிராணிகளால் இழுக்கப்படுகின்றவர்களாய் உள்ள மக்களுக்கு, எங்கும் நிறைந்திருக்கிற விஷ்ணுவாகிற ஓடத்தினைத் தவிர, சிறந்த சாதனம் வேறு ஒன்றும் இல்லை" (விஷ்ணு தர்மம்)

விஷ்ணு என்றால் எங்கும் நிறைந்தவன். விஷ்ணு எங்கும் நிறைந்த ஓடம். அந்த ஓடம் பிறப்பாகிய பெருங்கடலிலிருந்து நம்மை மீட்டுக் கரை சேர்க்கும்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்' - திருக்குறள்.

ஞான ஆனந்தங்களை இலக்கணமாக உடைய உயிர், சம்சார வாழ்க்கையில் ஐம்புலன்கள் ஆட்சியால்

பாதிப்படைந்தது. ஆனால், அகங்கார, மமகாரங்களை - 'நான்', 'எனது' என்ற செருக்கை வேருடன் அழித்து இறைவனைச் சேரும் உயிர்க்கு, பாதிப்புகள் நீங்கி, இறைவனுக்குச் சமமான ஞான, ஆனந்தங்கள் மீண்டும் கிடைக்கும்.

எளிய வழி போல் தோன்றும். ஆனால் இடைவிடாத தொடர்நிலைப் பயிற்சியின் மூலம்தான் உள்ளத்தில் உதிக்கும் அகங்கார மமகாரங்களைக் குறைக்க முடியும்; ஏதோ ஒரு காலத்தில் வேருடன் மாய்க்க முடியும் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

★ ★ ★

2(4)

இல்லதும் உள்ளதும் அல்லதவனுரு
எல்லையிலந்நலம் புல்குபற்றற்றே

ஏன் அவனைப் பற்ற வேண்டும்?

இறைவனுடைய சொருபம் (தன்மை), அழிந்து போகின்ற தேகத்தைப் போன்றதன்று. அழியாத உயிரைப் போன்றதும் அன்று.

இறைவன் எல்லையில்லாத ஆனந்த மயமானவன். ஆகவே, வெளிப் பொருள்களின் மீதுள்ள ஆசைகளை விட்டு, அவனைப் பற்றி, நீயும் குறைவில்லாத ஆனந்தத்தைப் பெறு.

பற்றப்படும் பொருளான இறைவனின் இனிமை, விடப்படுகிற பொருள்கள் போன்று இன்பம் அற்றனவாயும், குற்றங்களையுடையனவாகவும் இராது.

'அசித்' எனப்படும் உடல் தோன்றி மறையும் மின்னலைப் போன்று அழியும் தன்மையுடையது. ஆகவே அது 'இல்லது'; ஆனால் 'சித்' எனப்படும் உயிர் என்றுமே 'உள்ளது'.

"சத்தியம் என்ற சொல்லால் கூறப்படும் உயிர்களும், 'பொய்மை' என்ற சொல்லால் கூறப்படும் உடலும்" (தைத்ரிய உபநிஷத்)

அல்லது, "உயிருக்கு வீடாக உள்ள உடலும், அவ்வீட்டிற்குள் தங்கியிருக்கின்ற உயிரும்" என்றும் பொருள் கொள்ளலாம்.

"ஆனந்த மய:" (ஸ்ருதி) என்றும், 'உணர் முழுநலம்' என்றும் (திரு..*1-1-2*)

‘ஒடியாஇன்பப் பெருமையோன்’ என்றும்
(திரு..8-8-2)

‘சுடர் ஞான இன்பம்’ என்றும் (திரு 10-10-10)

‘எல்லா நற்குணங்களையும் இயற்கையாக உடையவன் இறைவன்’ (தோத்திர ரத்னம்) என்றும் அவன் சொரூபம் இருக்கும்.

குணமும், ஞானமும் உடையவனுக்கு, குணங்களால் மேம்பட்ட இறைவனுடன் சேரும் அனுபவம், போக ரூபமாய் இருக்குமாதலால், “புல்கு” என்கிறார்.

அவனைப் பற்றும் போது, வெளிப் பொருள்கள் மீதுள்ள பற்றை விட்டுவிட்டுத்தான் பற்ற வேண்டும் என்பது நியதி.

“பற்றிலார் பற்ற நின்றானே” (திரு 7-2-7)

பற்றற்ற ரிஷிகளும், முனிவர்களும் அவனையே பற்றினார்கள் என்பதால், நாமும் முயற்சிப்போம்.

“என் உடலை விட, என் உயிரைவிட வேறுபட்டவன், உயர்ந்தவன் இறைவன் என்று எனக்குத் தெரியும்.

‘இன்பம்’ என்று நினைக்கும் அற்பத்தனமான தேக சுகங்கள் உண்மையில் இன்பமற்றவை. துளிக்கூட ஆனந்தம் என்பதே அவைகளில் இல்லை; மின்னல் போல் தோன்றி அழியும் தேகமும், அதன் சுகங்களும் வேகமாக அழியக்கூடியவை என்பதும் எனக்குத் தெரியும்;

ஆனால், ரிஷிகளைப் போல், அவைகளின் மீதுள்ள பற்றைவிட முடியவில்லையே! என்ன செய்வது?”

“விடமுடியும். உங்களைச் சுற்றி நன்றாகப் பாருங்கள் உலக ஆசைகளைக் குறைத்துக் கொண்டு வாழும் பெரியவர்கள் இருப்பதை உணர்ந்து,

அவர்களுடன் முதலில் சேர்ந்து வாழுங்கள். மற்ற விஷயங்களின் மீதுள்ள பற்று குறையாததற்குக் காரணம், அந்தச் சூழ்நிலைகளை விட்டு விலகி, பற்று குறைந்தவர் சூழ்நிலையில் வாழ எந்த முயற்சியும் செய்யாததே. அத்துடன், உடல் வலுவுக்காக பயிற்சிகளில் ஈடுபடுவது போல், மன அழுக்கை நீக்கவும் இடைவிடாத பயிற்சிகள் தான் வழி. எல்லா ஆசைகளையும், நினைத்த உடனேயே, ஒரே நாளில் விட முடியாதுதான். கொஞ்சம், கொஞ்சமாக உறுதியான நெஞ்சுடன் உதறித் தள்ளினால், இலக்காகிய இறைவன் அருகில் தோன்றும் உணர்வைப் பெறலாம்.

★ ★ ★

2(5)

அற்றதுபற்றெனில் உற்றதுவீடுயிர்
செற்றது மன்னுறில் அற்றிறைபற்றே

முக்கிய இடையூறு (தடங்கல்) எது?

புறம்பேயுள்ள ஆசை நீங்கினால், உயிர் மோட்சத்தை அடையும். நிலை பெற்ற அந்த மோட்சத்தை அடைய விரும்பினால், கைவல்ய இன்பத்தினை (ஆத்மாவையே அனுபவித்து அந்தச் சுகமே போதும் என்று இருப்பதை) விட்டுவிட்டு, இறைவனையே பற்ற வேண்டும்.

இறைவனைப் பற்றும் போது வருகின்ற இடையூறை நீக்கும் வழியை அருளுகிறார்.

இடையூறு என்பது கைவல்ய அனுபவத்தை. 'கைவல்யம்' என்பது, உடல் மீதுள்ள ஆசையை விட்டுவிட்டு, (ஐம்புலன் ஆசையைவிட்டு) ஆத்மாவின் உயர்வு தெரிந்து, அதையே பேரின்பமாக, தவறாக எண்ணிச் சுவைத்திருப்பது. கைவல்யம் தேக இன்பம் காண்பதைவிடச்சிறந்ததுதான். ஆனால், அது, ஆத்மாவை விடச் சிறப்பான பரமாத்மாவைப் பற்றாததால் சிறப்புடையதன்று. ஆயினும், உயர்ந்த கைவல்யத்தை 'இடையூறு' என்னலாமோ? எனில், மிக, மிக உயர்ந்த பரமாத்ம இன்பத்தை விட்டு சாதாரண ஆத்ம இன்பம் பற்றுவதால் கைவல்யமும் இடையூறு தான்.

உயர்ந்த இந்திர பதவிக்கு ஆசைப்படுபவன், இந்தப் பூலோகத்திலுள்ள ஐஸ்வர்யங்களை விரும்ப மாட்டான். மிக உயர்ந்த பிரும்மாவின் பதவிக்கு ஆசைப்படுபவன், இந்திர பதவிக்கு ஆசைப்படமாட்டான். அதேபோல, கைவல்யத்தை (ஆத்மா அனுபவத்தை) ஆசைப்படுபவன், ஐஸ்வர்யம் முதலியவற்றில் கண் வையான். எல்லா நற்குணங்களையுடையவனாய், திவ்ய மங்கள விக்கிரகத்தை உடைய எம்பெருமானைப் பற்றுபவன், கைவல்யம் உட்பட எதையும் விரும்ப மாட்டான்.

வேறுபட்ட ஞானத்தையும், சொருபத்தையும் உடைய உயிர்ப் பொருளுக்கு உடலின் சேர்க்கையால் மறதி என்பது உண்டாகிறது. அந்த மறதி, யோகத்தின் பயிற்சியால் நீங்கியதும் உயிரின் சொரூபம் பிரகாசிக்கும். உயிர் நித்யமாய், ஞான, ஆனந்தமாய் இருக்கையாலே, "இது ஒன்றையே அனுபவிக்க அமையாதா!" என்று தன்னிடமே நாடும். அப்படி உயிர் தன்னையே அனுபவிப்பதை இந்த இடத்தில் "வீடு" (கைவல்ய மோக்ஷம்) என்கிறார். அந்த ஆசையை உதறி, நிலை நின்ற உறுதிப் பொருளான எம்பெருமானைப் பற்றுங்களேன் என்கிறார்.

'மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு' (மூன்றாம் திருவந்தாதி *-14*) என்பது போல்.

★ ★ ★

2(6)

பற்றிலன் ஈசனும் முற்றவும் நின்றனன்
பற்றிலையாய் அவன் முற்றிலடங்கே

அடியேனுக்குக் கிடைப்பானோ?

இறைவன் பக்தர்களுடன் பொருந்தி இருக்க, உலகத்துப் பொருள்கள் எல்லாமாகவும் நின்றான். ஆதலால், நீயும் (அவனிடம்) பற்றை உடையவனாய் அவன் தொண்டுகள் அனைத்திலும் சேர்க.

'பற்றுமிடத்தில் வரும் இடையூறை நீக்குமாறு அருளிச் செய்தீர். எசமானாயுள்ள அவன் நமக்குக் கிட்டுவானா?' என்று சந்தேகத்துடன் கேட்க, ஆழ்வார், அவன் எளிமையும் அன்பும் உருவானவன்; ஆகவே அவனே பற்றுக்கு இருப்பிடமானவன்' என்கிறார்.

அன்புள்ளவனாயினும் (மிக உயர்ந்தவனான) இறைவன் அன்றோ அவன்? எனின், அவன் இறைமைத் தன்மை பிரிக்க முடியாததாலே அப்படித் தோன்றுகிறது. அது அச்சத்துக்குக் காரணமாகாது. அந்தத் தன்மை அன்பு எனும் குணமாகக் கிடக்கிறது. அஞ்சுவதற்காக அல்ல. மிகப் பெரியவனுக்கு எளிமை என்பதே குணம் என்று சொல்லப்படும்.

"எல்லாப் பிராணிகளுக்கும் நான் ஒத்தவன்; எனக்கு எவனும் பகைவன் இலன்; அன்பனும் இலன்; எவர்கள் என்னை பக்தியால் அடைகின்றார்களோ அவர்கள் போலவே நானும் அவர்களிடத்தில் அன்புடன் வசிக்கின்றேன்" என்கிறபடியே அடையும் திறத்தில் ஒத்தவனாய் இருக்கிறான். (கீதை 9-24).

பிறப்பாலும், ஒழுக்கத்தாலும், ஞானத்தாலும் அவ்வுயிர்கள் இருந்த நிலையிலேயே இருப்பதால் எல்லோர்க்கும் ஒத்திருக்கிறான்.

பட்டர் அருளியது:-

"எங்கும் நிறைந்து எல்லா விருப்பமும் முற்றுப் பெற்றவனாக இருப்பதால் வாசுதேவன் ஆகிறாய்"(பகவத் கீதை) என்கிறபடி எல்லா நற்குணங்களோடும் கூடியவனாய், ஞானம், ஆனந்தம், குற்றமின்மை ஆகிய இவற்றையே வடிவாக உடைய ஸ்ரீவைகுண்டநாதனாகிய எம்பெருமானும், அந்தப் பரமபதத்தில் அவனுக்கு இடைவிடாமல் கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும் நித்யசூரிகள், முக்தர்கள் ஆகியோரிடம் பற்றில்லாதவனாய் இருக்கிறான். ஆனால், இந்தப் பூலோகத்தில் அவனிடம் பக்தி கொண்டிருக்கும் சம்சாரிகளிடத்திலோ பரிபூர்ணமான காதல் கொண்டிருக்கிறான்."

எம்பெருமானிடம் அன்பு செலுத்தாமல், அவனைப் பற்ற எண்ணாமலே பல ஆண்டுகள் வீணாகிவிட்டனவே, வாழ்வின் பெரும்பகுதி பாழாகிவிட்டதே என வருந்த வேண்டாம். அவனுடைய எளிமை, பக்தர் மீது கொண்ட அன்பு, வாத்சல்யம் ஆகிய குணங்கள் பல சமயங்களில் நிரூபிக்கப்பட்டவை.

தஞ்சம் அடைந்த சுக்ரீவனின் மனைவியைப் பிரிந்த வருத்தம் மிகுதியைக் கண்ட ஸ்ரீராமன், அதற்கு முன் தன்னைச் சேர்ந்தவர்களை விட வானரத்தலைவனிடம் வாத்சல்யம் மிகுதியாகக் கொண்டு, அவனுக்கு ஆறுதல் கூறும் போது "(அகலகில்லேன்) என்று பிரியாமல் இருக்கும் சீதையைப் பிரிந்தேன். எனக்கு அதில் தற்போது காரியம் இல்லை, உன் துக்கம் தான் எனக்குப் பெரிது" என்றார். பசுவின் சுபாவம், தான் முன்பு ஈன்ற கன்றைவிட, அன்று, அப்போது ஈன்ற கன்றிடம் அதிக வாத்சல்யம் காட்டி, முன் ஈன்ற கன்றைத் தன் கொம்பினால் தள்ளிவிடுமாம். அது போன்று, எம்பெருமானிடம் பக்தி செலுத்த, "காலம் கடந்து விட்டதே" என்று தயங்க வேண்டாம். அவன் நம் மீது அருள் பொழியக் காத்திருக்கிறான். அற்பப் பொருட்கள் மீதுள்ள ஆசையை

உதறித் தள்ளி, உடனே அவனைப் பற்றுவோம். பக்தர்களின் அன்பிலே உகப்பு கொள்கிறான் எம்பெருமான் என்பதை மறக்காதிருப்போம்.

"தாயும், தகப்பனும், உடன் பிறந்தோரும், வீடும், காப்பாற்றுபவனும், நட்டுவனும், கதியும், நாராயணனே ஆவான்" (சுபால உபநிடதம்).

நம் சுற்றத்தார்களில் ஒவ்வொருவரும் நமக்கு ஒவ்வொரு பயன் உள்ளவராக இருப்பர்; ஆனால் இறைவனோ எல்லாமாக இருந்து அனைத்தையும் அளிப்பான்.

நீயும் அவனைப் பற்றி "நான் எல்லா தொண்டுகளும் செய்வேன்" என்ற உறுதியுடன் அவனைச் சேர்ந்துவிடு.

★ ★ ★

2(7)

அடங்கெழில் சம்பத்து அடங்கக்கண்டு ஈசன்
அடங்கெழில.்.தென்று அடங்குகவுள்ளே

அவனே உறவு என்னும் உணர்வு

செல்வங்கள் எல்லாம் இறைவனுக்கு அடங்கியவை. அச்செல்வத்துக்குள் ஒரு செல்வமாக அடங்குக.

இறைவன் அடியாரிடம் பற்றையே இயல்பாக உடையவன் என்றார் முன்பு.

இறைவன் அளவிடமுடியாத இரண்டுவிதமான மஹாவிபூதியை (உலகங்களை) உடையவனாக இருக்கிறான்.

அவை நித்யவிபூதியாகிய ஸ்ரீவைகுண்டம், லீலா விபூதியாகிய இந்த பூலோகம்.

இந்த அடியவனோ மிகவும் சிறியவன். இவனால் இரு விபூதிகளையுடைய அந்த பரமாத்மாவைக் கிட்ட முடியுமோ? அது சாத்யமா?

அவன் ஐஸ்வர்யக் கடல். இவன் துரும்பு. இந்தத் துரும்பை அந்த ஐஸ்வர்ய அலைகள், அலைமேல், அலையாக வந்து இவனைக் கரையில் தள்ளிடுமோ? ஐஸ்வர்யம் எல்லாம் நம் தலைவனுடையது என்று நினைத்தாலே தானும் அதில் ஒன்றாகச் சேரலாமே!!

எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள சம்பந்த உணர்வு ஒன்றே போதும் என்பதற்கு ஈடு முப்பத்தாறாயிரப்படியில் அருளிச் செய்யப்பட்டுள்ள ஒரு சுவையான கதையைக் காண்போம்.

ஒரு நகரத்திலே வசித்த ஒரு வணிகன் நிறைய பொருள் ஈட்ட வெளிநாடு செல்லத் தீர்மானித்தான். அந்தச் சமயத்தில் அவனது மனைவி கர்ப்பிணியாய் இருந்தாள். ஆனாலும் அவன் புறப்பட்டு வெளிநாடு சென்றான்.

இரண்டு மாதம் சென்றதும் அவள் ஒரு பிள்ளையைப் பெற்றாள். அந்த மகன் இளைஞனாக வளரும்வரை வணிகனால் ஊர் திரும்ப முடியவில்லை. மகன் உரிய வயது வந்ததும் குலத்தொழிலான வர்த்தகத்தை ஆரம்பித்து மேலும் விருத்தி செய்ய வெளிநாடு சென்றான். அங்கு பெரும் பொருள் ஈட்டி ஒரு கப்பலில் தன் ஊர் துறைமுகத்திற்கு வந்து இறங்கினான். அதே கப்பலில் பல ஆண்டுகளுக்கு முன் வெளிநாடு சென்றிருந்த தந்தையும் தான் ஈட்டிய பல மூட்டைகளுடன் வந்து இறங்கினான். தந்தையும், மகனும் சிறிதாக இருந்த அந்த ஒரே இடத்தில் தத்தம் மூட்டைகளை இறக்க முயற்சி செய்யும்போது அவர்களுக்குள் சண்டைவந்துவிட்டது; விவாதம் முற்றிவிட்டது. அப்போது அங்கேயிருந்த ஒரு கிழவன் அவர்களைப் பார்த்து "அந்தோ! உங்களுக்குள் உறவு அறியாமல் இது என்ன விவாதம்? இது உன் தந்தை. நீ அவன் மகன். வீண் சண்டை ஏன்?" என்று அறிவித்தான். உடனே இருவருக்கும் சம்பந்த உணர்ச்சி உண்டாகி இருவர் மூட்டைகளும் ஒரே சரக்காகி விவாதம் நீங்கி பரம மகிழ்ச்சியில் திளைத்தனர்.

அது போல, நாமும் நம் துன்பங்களைப் போக்கும் தந்தையாகிய ஸ்ரீமன் நாராயணனிடம், "உன்தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது" (திருப்பாவை) என்னும்படி உறவின் உறுதியைத் தெரிந்து கொண்டு, அவனிடம் விவாதத்தை விட்டொழித்தால், "நான் உனக்கு அடிமை" என்பதைப் புரிந்து கொண்டால், அவனிடம் சேருவதற்கு எந்தவிதமான தடங்கலும் இல்லை.

ஆகவே, இறைவனுக்கும், நமக்கும் உள்ள சம்பந்த ஞானம் அறிந்தாலே போதும்.

எல்லாம் அவன் உடைமையே என்ற நினைவே வேண்டுவது. அந்த நினைவுடன் அந்தச் செல்வத்தில் சேர்ந்து, நாமும் அதன் ஒரு அங்கமாக மாறவேண்டும்.

அடியவன் அப்படி அவன் செல்வத்தில் சேர்ந்து விடுவதால் என்ன பயன்?

சேஷியான இறைவனுக்கு உகப்பு ஏற்படுகிறது. அதனால் இந்த ஆத்மாவுக்கு என்ன? அடிமை செய்யும் வாய்ப்பு கிடைத்ததே பலன். இதில் அடங்குகையாவது என்ன? காலம் காலமாக அவன் விபூதியில் (செல்வத்தில்) சேர்ந்துதானே இருக்கிறோம்? என்றால் உடைமை, உடையவன் என்னும் சம்பந்த ஞானம் காரணமாகத்தான் அவன் செல்வத்தில் ஒருவனாகச் சேரவேண்டும்.

கடல் அளவிடக் கூடாததாக இருப்பினும், அதில் உள்ள மீன் முதலிய ஜீவராசிகளுக்கு அதுவே புகலிடம்.

அதுபோன்று, சம்பந்த ஞானம் காரணமாக அவனைக் கிட்டலாம்; சம்பந்த ஞானம் இல்லாத துரும்பையே கடல் கரை சேர்க்கின்றதே! கவலை ஏன்?

சம்பந்த ஞானத்தைப் பிறப்பித்தலும், உயிர், இறைவன் ஆகிய இருவரையும் சேர்த்தலும் ஆசாரியன் தொழில்.

★ ★ ★

2(8)

உள்ளமுரைசெயல் உள்ளவிம்மூன்றையும்
உள்ளிக்கெடுத்து இறையுள்ளிலொடுங்கே

எதைக் கொண்டு பற்றுவது?

மனம், வாக்கு, செயல் ஆகிய இம்மூன்றையும் ஆராய்ந்து பார்த்து, மற்றப் பொருள்களிலிருந்து அவைகளை மீட்டு இறைவனிடத்தில் சேர்ப்பாய். எப்படி?

வெளிப் பொருட்களில் விருப்பத்தைச் செலுத்தும் மனத்தை உட்பொருளை நோக்கும்படி செய்தால், அது இறைவனை நினைப்பதற்குக் காரணமாக அமையும். அந்த நினைவு முதிர்ந்து, வழிந்து, சொல்லாகப் புறப்படுகைக்குக் காரணமாகும் வாக்கு.

'குணங்களால் அடிமை பூண்டு இருக்கிறேன்' (ஸ்ரீராமாயணம் கிஷ்; 4:12) என்கிறபடியே, திருவடிகளிலே விழுந்து எல்லாத் தொண்டுகளையும் செய்வதற்கும் காரணமாவது உடல். மனம், வாக்கு செயல் ஆகிய இம்மூன்றையும் நாம் சிரமப்பட்டு சம்பாதிக்க வேண்டியிராமல் சேஷியான (தலைவனான) இறைவன் நமக்குப் பிறவியிலேயே அருளியிருக்கிறானே!

இறைவனை நினைக்க 'நெஞ்சு'
அவன் புகழ் பாட 'நாக்கு'

அவனை வணங்க 'கை, கால்கள்'; எல்லாம் என் ஆட்சியில் அடங்கியவை; இறைவனால் அளிக்கப்பட்டவை, வேறு யாரிடமும் போய், "இறைவனை நினைக்க வேண்டும், கொஞ்சம் உன் நெஞ்சத்தைக் கடனாகக் கொடுங்கள்" என்று கெஞ்ச வேண்டுமோ?

"இந்த என் நெஞ்சும், நாக்கும், கை கால்களும் அடையத் தகாத பொருட்களிடம் அன்பு செலுத்தி, அவைகளுடன் கூடிக் குலவிக் கொண்டிருக்கிறதே! அந்தோ! உடனே அந்தத் தகாத பொருட்களிடமிருந்து என்

நெஞ்சையும், நாக்கையும், தேகத்தையும் மீட்டு, இறைவனிடம் அன்புடன் பொருத்துவேன்".

பாழிலே, மேட்டிலே பாய்கிற நீரைப் பள்ளத்திலே, பயிரிலே பாய்ச்சுவதைப் போன்று, அடையத்தக்க இறைவனிடம் உங்கள் கரணங்களை (கை, கால், முதலியவற்றை) பக்தியுடன் ஒடுங்கும்படி ஆக்குவீர்களாக.

★ ★ ★

2(9)

ஒடுங்கவவன்கண் ஒடுங்கலுமெல்லாம்
விடும்பின்னுமாக்கை விடும்பொழுதெண்ணே

அவனைப் பற்ற விரோதிகள் நீங்கும்

இறைவனிடத்தில் சென்று சேரவேண்டும் என்ற நினைவு முதிர்ச்சியில், (விரோதிகள்) எல்லாம் தாமாகவே விட்டுப் போய்விடும்; பிறகு, உயிரானது உடலை விட்டு நீங்கும் காலத்தை எண்ணிக் கொண்டிருப்பாயாக.

முன் இரண்டு பாசுரங்களில், இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்த ஞானம் உண்டாகவே இவன் தன் சிறுமையும், இறைவன் மேன்மையும் பார்த்து அஞ்சி அகல வேண்டாம் என்றும், இறைவன் தனக்காகத் தந்த கரணங்களை (தேக உறுப்புகளை) அவனை வணங்கு தலுக்குப் பயன்படுத்துக என்றும் அருளிச் செய்தார்.

'இறைவனை வழிபட ஒட்டாமல் தடுக்கும்' விரோதிகள் (ஐம்புலன்கள்) ஆட்சி மிகுதியாக இருந்ததால் அன்றோ நாங்கள் வழிபடாது இருக்கின்றோம்' என்று இவன் சொல்ல, 'நீங்கள் அவனைக் கிட்டியதும் அவை தானாகவே விட்டுப் போய் விடும்' என்கிறார் இத்திருப்பாசுரத்தில்.

பிரகாரமாக இருக்கும் நீங்கள் (எம்பெருமான் என்கிற ப்ரகாரியின் தேகமாக இருக்கின்ற உயிர்கள் பிரகாரம்) பிரகாரியாக இருக்கிற அவனிடம் சென்று சேர (உயிர் இறைவனின் சொத்து, அவனிடமே சேரத் தக்கது). "நானே ஈச்வரன்" என்ற இறுமாப்பைத் தவிர்த்து, எம்பெருமான் ஆட்சிக்கு இசைந்து அவன் அபிமானத்துக்குள் அடங்குங்கள்.

நீங்கள் செய்யத் தக்கனவற்றைச் செய்ய, 'அவித்யா' (அறியாமை) போன்ற தகாதவை எல்லாம் தாமாகவே நீங்கும். ஆத்துமாவின் (உயிரின்) சொரூபத்துக்குத் தக்கவற்றை ,செய்ய(உயிரின் சொரூபம் - இறைவன்

எசமான், என் உயிர் அவன் சொத்து, அவனை அடைய வேண்டும் என்ற சம்பந்த ஞானத்துடன், அவனுக்குத் தொண்டு செய்வது - சொருபத்துக்குத் தக்கவற்றைச் செயல்) சொரூபத்துக்கு விரோதிகளாக உள்ளவை (ஐம்பெரும் பகைவர் என்னும் ஐம்புலன்கள் ஆட்சி) தானாக விட்டுப் போகும்.

அறிவின்மை, கருமம், வாசனை, (முன்பு செய்து போனவை மீண்டும் திரும்ப ஏதுவான சம்ஸ்காரம்) ருசி (வேறு சுவைகளாலும் மீட்க ஒண்ணாதபடி ஒன்றிலே செல்லும் விருப்பம்) - பல வகைப்படும் இவையெல்லாம் அடியோடு விட்டு கழியும்.

அப்படியானால், இவை நீங்கியபிறகு இவன் செய்யத்தக்க காரியம் யாது? என்றால்

<u>பின்னும் ஆக்கைவிடும் பொழுது எண்</u>

பக்தியின் பயனாக பலன் தப்பாது, தானாகவே வரும் என்று ஆறி இருக்காமல், அவற்றின் காரியமான இச்சரீரமும் ஒரு படி போய், தடை நீங்கியது, பலன் கிடைப்பது எப்போதோ "கூவிக்கொள்ளும் காலம் இன்னும் குறுகாதோ!" என்று நாட்களை எண்ணிக் கொண்டு இருப்பர். 'அப்படியானால் கைவல்ய நிஷ்டனைப் போல் (ஆத்மாவின் சுகம் மட்டும் அனுபவிப்பவன்) உடலின் நீக்கத்தை மட்டும் விரும்புவது ஏன்?' என்று கேட்க, இன்பத்தில் இச்சையுடைய ஒரு பெண் தன் உடம்பின் அழுக்கினைப் போக்கித் தன் கணவனோடு இன்பம் நுகர உரிய காலத்தை எதிர் நோக்கி இருத்தல் போன்று, இவனும் பேற்றுக்கு உறுப்பாக உடலை விட்டு உயிர் நீங்கும் காலத்தை எதிர்பார்த்திருக்கக் கடவன்' என்கிறார்.

'அழுக்கு உடம்பு' (திருவிருத்தம் *-1*) என்கிற இவ்வழுக்கு நீங்கி மோக்ஷமாகிய பலனை அடைதல் எப்போதோ என்று எதிர்ப்பார்த்திருக்க வேணும்.

அப்படியானால், கூற்றுவன் என்கிற யமன் ஒருவன் இருக்க, பேற்றினை (பலனை) எதிர்பார்த்து இருத்தல் என்பது எவ்வாறு பொருந்தும்?

'மனிதன் பாவத்தினைச் செய்தவனாய் இருக்கவே, யமனைக் கண்டு அஞ்சுகிறான்; செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவர செய்து முடித்தவர்கள், யமனை அன்புள்ள விருந்தினரைப் போன்று புன்னகையுடன் வரவேற்கிறார்கள்' (பாரதம்)

ஆதலால், பொருந்தும்.

மகாபாரதம் ராஜசூயத்தில் தர்மபுத்திரரை நோக்கி கண்ணபிரான் பணித்த ஸ்லோகத்தின் ஒரு அருமையான கருத்தை காஞ்சி ஸ்வாமி அழகாக எடுத்துரைக்கிறார். "இந்த உலகில் பலவகையான துக்கங்கள் உள்ளன. அவற்றுள் மரண துக்கம் எல்லாவற்றிலும் பெரிது. மரண காலத்தில் சரீரம் சிறிதுசிறிதாக தன்னுடைய சக்தியை இழந்து விடுகிறது. இந்திரியங்கள் நிலைகுலைகின்றன. இப்படி பல காரணங்களினால் மரணத்தைப் பற்றி மிகப் பெரிய துக்கம் உண்டாகிறது. இந்த உலகத்தோடு அது வரையில் இருந்த சம்பந்தம் என்ன? சொந்த பந்தங்களோடு இருந்த சம்பந்தம் என்ன? வீடு, வாசல் முதலிய பல வகைப்பட்ட பொருள்கள் இன்னும் தன்னுடையதாக பாவித்து வைத்துக் கொண்டிருந்த சம்பந்தம் என்ன? ஆகிய இவற்றையெல்லாம் விட நேருகிறதே! தாம் செய்ய வேணுமென்று நினைத்துக் கொண்டிருந்த பல வகைக் காரியங்கள் முடிவு பெறாமல் குறைபட்டு நிற்கின்றனவே! இப்படியெல்லாம் பல சிந்தனைகளினால் மரணம் நேரப் போகிறதென்றால் யாருக்கும் ருசிப்பதில்லை. பெரும்பாலும் துக்கம் அடைவதே இயல்பு.

பரலோகம் உண்டென்றும், பாப புண்யங்களுக்கு பலன் கிடைத்தே தீரும் என்றும், சொர்க்க நரகங்கள் என்றும் நம்பிக்கை உள்ளவர்களுக்கு தங்கள் வாழ்நாளில் செய்த பலவகைப் பாவங்களை நினைத்து,நினைத்து அவற்றின் பலன்களை அநுபவிக்க நேரிடுமே என்கிற அச்சத்தினால் மிகுந்த துன்பம் உண்டாகும்.

சிலர் உலக வியாபாரங்களில் மூழ்கி, பரலோகத்தைப் பற்றி நினைக்க அவகாசமும் பெறாமல் இந்த உலக விஷய சுகங்களுக்காக பாபம் செய்கிறார்கள்.

வேறு சிலர் பரலோகத்தையும், பாப புண்யங்களையும், ஈஸ்வரனையும் "எதுவுமே இல்லை" என்று சொல்லி, சரீர சுகத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைத்துப் பாபம் செய்கிறார்கள்.

இன்னும் சிலர், தாம் நீண்ட காலம் வாழப்போகிறோம் என்பதாகவும், கடைசி காலத்தில் பரலோகத்திற்கு வேண்டியதைச் செய்து கொள்ளலாம் என்றும் நினைத்து உள்ளவரையில் சம்சார வாழ்க்கை சுகத்திற்காக பாபச் செயலில் ஈடுபட்டு, பிறகு மீள முடியாமல் திணறுகின்றனர்.

ஆனால், மரணமோ நமது எண்ணங்களையும், காரியங்களையும், சமய சந்தர்ப்பங்களையும் லட்சியம் செய்யாமல் 'சடக்'கென வந்து விடுகின்றது. ஆகையால் பெரும்பாலும் எல்லோருமே மரணத்துக்கு அஞ்சி வருந்துகின்றனர்.

ஆனால், உண்மையான பக்தர்களும், உலகத்தின் போக்கை நன்றாய் கண்டறிந்தவர்களும், எப்போதும் பகவத் பாகவதர்களை சிந்தை செய்து கொண்டு ஆத்மானந்தத்தில் ஆழ்ந்து கிடப்பவர்களும், மரணத்தைப் பற்றி சிறிதும் வருந்த மாட்டார்கள். மரணத்தை அவர்கள் ஒரு உற்சவமாக நினைத்து பெரு மகிழ்ச்சி கொள்வார்கள்.

ஆகவேதான் ஆழ்வார் "ஆக்கை விடும்பொழுது எண்ணே" என்கிறார்.

எம்பார் ஸ்வாமி:-

இந்தச் சரீரம் விட்டுத்தொலையும் விஷயத்திலே ஒரு கவலை உண்டோ?" என்று பணித்தாராம். காரணம் கழிந்தால் காரியமும் தானாகவே கழிந்து விடும் என்பதால், சரீர நிலைக்குக் காரணமான அவித்யா, கர்மா, வாசனை,

ருசி ஆகியவை கழிந்தபோதே காரியமான சரீரமும் கழியக் கூடியது தானே? அவ்விஷயத்தில் விசாரம் எதற்கு? என்றார்

அப்படியானால் செய்ய வேண்டியதை எல்லாம் செய்து முடிப்பது சாத்தியமா? செய்து முடித்தவர்கள் யார்?

"அரசனே, சாஸ்திரங்களோடு கூடின எல்லா வேதங்களும், அறியத்தக்க எல்லா பொருள்களும், எல்லா யாகங்களும், யாகங்களில் ஆராதிக்கப்படுகின்ற எல்லா த் தேவர்களும் கிருஷ்ணனே ஆவான் என்று எந்த அந்தணர்கள் கிருஷ்ணனை உள்ளவாறு அறிகிறார்களோ, அவர்கள் எல்லா யாகங்களையும் செய்து முடித்தவர்கள் ஆவார்கள்" (பாரதம்) என்கிறபடி, எம்பெருமானையே பற்றுக் கோடாக பற்றிய அடியார்களே சாதித்து முடித்தவர் ஆவர்.

★ ★ ★

2(10)

எண்பெருக்கந்நலத்து ஒண்பொருளீறில
வண்புகழ்நாரணன் திண்கழல்சேரே

இறைவனைப்பற்ற இதுவே மந்திரம்

எண்ணிக்கையில் மிகப்பலவாய் இருப்பனவாய்,
ஞானத்திற்கு நிலைக்களமாய்,
ஞானமயமாய்,
அழிவு அற்றனவாய் இருக்கிற உயிர்களே!
அழிவு அற்ற புகழுடைய
நாராயணனது
உறுதியான திருவடிகளைச் சேர்வீர்.

முன் பாசுரங்களில் சொன்னபடி செய்கிறோம். ஆயின், வழிபாடு செய்தற்குரிய பற்றுக் கோடான மந்திரம் யாது?

'அது இன்னது என்றும் அதன் பொருள் அறிந்து கொளல் வேணும்' என்றும் அருளிச் செய்கிறார் ஆழ்வார்.

அப்படியானால், மந்திரம் மாத்திரம் போதாதா? அர்த்தமும் அருளிச் செய்ய வேண்டுமோ?

இம்மந்திரத்தை மற்றவர் ஜபம், ஹோமம் முதலியவைகள் செய்து காரியம் கொள்வர்.

ஆனால், நம் ஆசாரியர்கள், 'ஆத்ம சொரூபம் இன்னபடி (உயிரின் நிலை இதுதான்) என்பதற்கு ஏற்றதாயுள்ள இதன் பொருளின் நினைவு மோக்ஷத்திற்குச் சாதனம்' என்று தாங்களும் அதையே சிந்தித்து, தங்களைக்கிட்டினார்க்கும் இடைவிடாமல் உபதேசித்துக் கொண்டிருந்தார்கள்.

முன்னர் மந்திரத்தைச் சொல்லி, பின்னர் அர்த்தத்தைச் சொல்லுதல்; அல்லது, முதலில் அர்த்தத்தைச் சொல்லிப் பின்னர் மந்திரத்தைச் சொல்லல் என்று ஒரு முறை உண்டு.

அதற்குக் காரணம், மந்திரத்தின் பொருளுடைய நினைவு இன்றியமையாதது என்பதால்.

'யாவையும் யாவரும் தானாம் அமைவுடை நாரணன்' (திருவாய் 1.3.3)

'நாரணன் மூவேழ் உலகுக்கும் நாதன்' (திருவாய் (2-7-2)

'உள்ளும் புறமும் நிறைந்து நாராயணன் இருக்கின்றான்' (தைத்ரிய நாராயண உபநிடதம் 7-1-8)

'பரஞ்சோதியும் நாராயணனே; பரமாத்மாவும் நாராயணனே' (தைத்ரிய நாராயண உபநிடதம்....)

இப்பாசுரம் திருமந்திரத்தின் அர்த்தம் என்பது கூரத்தாழ்வான் சரித்திரத்தில் ஒரு சுவையான சம்பவத்தால் தெரிய வரும்.

இராமானுஜரின் பரம சீடரான கூரத்தாழ்வானுக்கு இரண்டு திருக்குமாரர்கள், ஒரே நேரத்தில் இரட்டையாகப் பிறந்தனர். இராமானுஜர் பெரும் மகிழ்ச்சியுடன் பதினோராம் நாள் ஆழ்வான் திருமாளிகைக்குச் சென்று, தன் சீடர் எம்பாரிடம் அக்குழந்தைகளை எடுத்துவரச் சொன்னார். எம்பார் சென்று குழந்தைகளை எடுத்து வரும்போதே திருஷ்டி படாமலிருக்க மந்திர ரத்னமான த்வ்ய மந்திரத்தை அநுசந்தானம் செய்து கொண்டே வந்தார். குழந்தைகளைப் பெருங்களிப்புடன் கண்ட இராமானுஜர், "எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கிறதே! இப்படி ஆகும்படி என்ன செய்தீர்?" என்று வினவ, எம்பார், "குழந்தைகளுக்குக் காப்பாக த்வய அநுஸந்தானம் செய்து கொண்டே வந்தேன்" என்றார். அதைக் கேட்டு உகப்படைந்த உடையவர், "நன்று செய்தீர்! இக்குழந்தைகள் உய்யும் வகை செய்ததால், நீரே இவர்களுக்கு ஆசார்யராகக் கடவீர்" என்று நியமித்து விட்டார். அது முதல் எம்பாரே ஆழ்வான் குழந்தைகள் பட்டர், ஸ்ரீராமப் பிள்ளை ஆகியோருக்கு ஆசார்யராக இருந்து அவர்களை வளர்த்து வந்தார்.

சில ஆண்டுகள் சென்றதும், ஒரு நாள், ஆழ்வான் தன் திருக்குமாரர்களுக்கு முதல் ஒன்பது பாசுரங்கள் கற்றுத் தந்து, 'எண்பெருக்கந்நலத்து' என்ற இப்பாசுரம் (10ம் பாசுரம்) வரும்போது அவர்களிடம், 'இத்தை உங்கள் ஆசிரியரிடம் (எம்பார்) சென்று கேட்டுக் கொள்ளுங்கள்' என்று அவர்கள் ஆசிரியருக்கும் கவுரவம் தர எண்ணிக் கூறினார். பின், திருக்குமாரர்கள் எழுந்து போக எத்தனிக்க, ஆழ்வான் அவர்களை மீண்டும் அமரச் செய்து, "இன்ன போது, இன்னார் இருப்பார்; இன்னார் போவார் என்று தெரியாது; இருந்து கேளுங்கள்" என்று கூறி திருமந்திரத்தை உபதேசித்துப் பின் இப்பாட்டைக் கூறி, 'இப்பாசுரத்தையே திருமந்திரத்திற்கு அர்த்தமாக நினைத்திருங்கோள்' என்று பணித்தார்.

இப்பாசுரத்தில் "ஈறு இல ஒண் பொருள்" என்பது சிறந்த பொருளாகிய ஜீவாத்ம வர்க்கத்தைக் குறிக்கும்.

'ஈறு இல வண்புகழ் நாரணன்' என்றால் முடிவில்லாத திருக் கல்யாண குணங்களை உடையவனான நாராயணன்.

திருவடிகள் அடியார்களை ஒருக்காலும் விட்டுக் கொடுக்காத திண்மை உடையதால் "திண்கழல்" என்கிறார்.

உடலுக்குத் தன்னை அறியும் ஆற்றலும் இல்லை; பிறபொருளை அறியும் ஆற்றலும் கிடையாது. அது அறிவின்மைக்கு நிலைக்களன்.

ஆனால், உயிர் அவ்வாறின்றி அறிவிற்குப் பற்றுக்கோடாய் இருப்பதனால் தன்னையும் அறிந்து கொண்டு, பிற பொருளையும் அறிகின்றதாயும் இருப்பதால், உடலுக்கும், உயிருக்கும் உள்ள வேற்றுமையை தெரிவிக்க "நலம்", "ஒண்மை" என்கிற இரண்டு அடைமொழிகளை அருளிச் செய்கிறார் ஆழ்வார்.

இறைவனுக்கும், உயிர்களுக்கும் உள்ள சம்பந்தம் ஏதோ ஒரு காலத்தில் வந்தது அல்ல, என்றுமே உள்ளது என்னும் ஞானம் உடைய அடியாரை அவன் என்றும் விடுவதில்லை. ஆதலால், அவன் திருவடிகளில் சேருங்கள் என்று உபதேசிக்கிறார்.

திருமந்திரம்

முமுக்ஷு:

முமுக்ஷு என்பவன் யார்?

ஆசைகள் அனைத்தையும் விட்டு விட்டு, மோக்ஷம், (அதாவது பரமபதம், ஸ்ரீவைகுண்டம், நித்யவிபூதி, எம்பெருமான் திருவடிகள்) அடைய வேண்டும் என்ற ஒரே விருப்பம் உடையவனே முமுக்ஷு.

முமுக்ஷு அறியவேண்டிய ரஹஸ்யங்கள் (சகல வேதாந்த சாரத்தையும் சொல்லும், விலைமதிப்பற்ற, நுண்ணிய பொருள்கள்) மூன்று.

அவை *1)* **திருமந்திரம்**
2) **த்வயம்**
3) **சரம ஸ்லோகம்**

"ஓம் நமோ நாராயணாய"

இந்தப் பாசுரத்தில் அறிவுறுத்தப்படுவது "ஓம் நமோ நாராயணாய" எனும் திருமந்திரம்.

"ஓம்" என்கிற ப்ரணவத்தை 'நமோ நாராயணாய" என்கிற மந்திரசேஷம் விவரிக்கின்றது.

அதே போல, மந்திர சேஷத்தை "த்வயம்" என்னும் ரஹஸ்யம் விவரிக்கின்றது.

'த்வயம்' என்கிற ரஹஸ்யத்தை 'சரமஸ்லோகம்' என்கிற ரஹஸ்யம் விவரிக்கின்றது.

ஆதலால், திருமந்திரமே பிரதம ரஹஸ்யம்.

சகல வேத சாரமான

"ஓம் நமோ நாராயணாய" எனும் திருமந்திரத்தை, அதன் சிறப்புக்கும் மேன்மைக்கும் பொருந்த, மிகுந்த ப்ரேமத்துடன், கனிந்த நெஞ்சுடன், தகுதியில்லாதவர் காதில் விழாதபடி அனுஸந்திக்க வேண்டும். (வாயினால் தெளிவாக உச்சரித்து வெளியிட வேண்டும்)

திருமந்திரத்தின் உட்பொருள் சர்வேஸ்வரன் ஸ்ரீமன் நாராயணன். அவனிடமும், அவனை நமக்கு அறிவுறுத்திய ஆசார்யனிடமும் மிகுந்த பக்தி (அன்பு) இருந்தால் இம்மந்திரம் நமக்கு உதவும். இம்மூன்றிடத்திலும் செலுத்தும் பக்தியே, எம்பெருமானை அடைய முதல் உபாயமாகும்.

இந்த உலக இன்பங்களில் மூழ்கிக் கிடக்கும் சம்சாரிகள் அறியாமை, கர்மா, கர்ம வாசனை, கர்ம வசப்பட்ட ருசி ஆகியவற்றில் சிக்கித் தவிப்பவர்கள். இந்த இருள் உலகத்தில் கட்டுண்டு கிடக்கிற பக்த ஸேதனர்கள் தங்களையும் மறந்து, எம்பெருமானையும் மறந்து கிடக்கின்றனர். இந்த மறதியினால், எம்பெருமானுக்கு செய்ய வேண்டிய கைங்கர்யத்தை இழந்து நிற்பதும் இல்லாமல், "ஐயோ! இப்படி இழந்து விட்டோமே!" என்கிற வருத்தம் சிறிதும் இன்றி, காலம் தள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட சம்சாரம் என்கிற பெருங்கடலிலே இவர்கள் விழுந்து திக்கு முக்காடுவதால், சர்வேஸ்வரன் ஸ்ரீமன் நாராயணன் தன் க்ருபை என்னும் உயர்ந்த குணத்தினால், இவர்களுக்கு ஞானம் கிடைத்து கரை சேர எல்லா சாஸ்திரங்களுக்கும் நிலைக்களனான, ஐந்து விசேஷ அர்த்தங்களை - அர்த்த பஞ்சகத்தை - திருமந்திரம் மூலம் வெளியிட்டருளினார்.

இதில் தனிச்சிறப்பு என்னவென்றால், எம்பெருமான் நாராயணனே ஆசார்யனாகவும், சிஷ்யனாகவும் இருந்து கொண்டு திருமந்திர உபதேசத்தை வெளியிட்டருளினான் என்பதே. ஏனெனில், ஒரு சிஷ்யன் எப்படி இருக்க வேண்டும் என்பதை உலகத்தார் அறியாமல் இருந்ததே காரணம்.

<u>சிஷ்யன் யார் ?</u>

சாஸ்திரத்தில் நம்பிக்கை உள்ளவனும், அதில் சொன்ன தர்மாநுஷ்டானத்தில் ஈடுபட விருப்பம் உள்ளவனும், அதற்குத் தக்க நடத்தை உடையவனும், விஷ்ணு பக்தி உடையவனும், தற்பெருமையில்லாத பரிசுத்தனும், ஆசார்ய பக்தியில் ஆழங்காண

முடியாதவனும், ஆசார்ய கைங்கர்யத்தில் வல்லவனும், மனோ தைர்யம் உள்ளவனும் எவனோ அவனே சிஷ்யன்.

திருமந்திரத்திற்கு அர்த்தபூர்த்தி உள்ளதால், ரிஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் இதையே விரும்பினார்கள்.

எம்பெருமான் எங்கோ வெகுதூரத்தில், ஸ்ரீவைகுண்டத்தில் வாசம் செய்தாலும் இந்தத் திருமந்திரம் எனும் வாசகம் நமக்கு வெகு அருகில் இருந்து கொண்டு, நாம் இதை மன நிறைவுடன் சொல்லும்போதெல்லாம் நம் விருப்பத்தை ஈடேற வைத்து காப்பாற்றுகிறது. இத்திருநாமமே திரௌபதிக்கு ஆபத்தில் புடவை சுரந்து மானம் காத்தது.

<u>அறியவேண்டிய அர்த்தம்</u> எல்லாம் ஐந்து என்பர் பெரியோர்.

அவையாவன:
1) இறைவனின் நிலை
2) உயிரின் நிலை
3) உயிர் இறைவனைச் சேரும் உபாய நிலை.
4) அப்படிச்சேரவிடாமல் தடங்கலாக இருக்கும் விரோதியின் நிலை.
5) முடிவாக அடையும் பேற்றின் (பலனின்) நிலை.

இந்த 'அர்த்த பஞ்சக'த்தை உள்ளடக்கியதுதான் திருமந்திரம். எப்படி?

'ஓம்' என்கிற ப்ரணவத்தாலே சேதன (ஜீவாத்மா) சொரூபத்தையும்

'நம' என்கிற சொல்லாலே உபாயம், தடங்கல் ஆகியவற்றின் சொரூப்பத்தையும்

'நாராயண' என்கிற பதத்தாலே எம்பெருமானின் சொரூபத்தையும், அதில் 'ஆய' என்கிற சொல்லாலே

முடிவாக அடையும் பலனின் சொருபத்தையும் விளக்குவதால், திருமந்திரத்தில் அர்த்த பஞ்சகம் அடங்கியுள்ளது.

திருமந்திரத்தின் ஈடு இணையற்ற தனிச்சிறப்பு:-

பூர்வாசார்யர்களான ஸ்ரீமன் நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமானார் முதலியவர்கள் திருமந்திரத்தின் பொருளைத் தாங்கள் அறிந்து கொள்வதற்கு முன்பு திருமழிசையாழ்வார் சொன்னது போல "அன்று நான் பிறந்திலேன்" என்று தங்களை இந்தப் பூவுலகத்தில் பிறந்தவர்களாகவே நினைக்கவில்லை. ஆனால், பொருளை அறிந்து கொண்ட பின்னர் "பிறந்தபின் மறந்திலேன்" என்ற பக்தி உணர்வுடன் வாழ்நாள் முழுவதும், இந்த மந்திரத்தின் அர்த்தத்தைத் தவிர வேறு எதைக் கொண்டும் பொழுது போக்கி அறியாதார்.

ஓம்

முதல் அக்ஷரம் 'ஓம்' எனும் ப்ரணவ மந்திரம் எல்லா வேதங்களுக்கும் சாரம்.

ஓம் என்கிற ப்ரணவம் 'அ' காரம், 'உ'காரம், 'ம' காரம் என்னும் மூன்று திருவக்ஷரங்களின் (எழுத்துக்களின்) சேர்க்கை.

இதில் 'அ'காரம் என்கிற முதல் எழுத்தின் பொருள் எல்லா உலகங்களையும் படைப்பதற்கு காரணமாகவும் எல்லோரையும், எல்லாவற்றையும் எப்போதும் காப்பாற்றுவபவனாக உள்ள எம்பெருமான் என்பதே.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.''

-திருக்குறள்

பல இலக்கியப் படைப்புக்களும் 'அ' என்கிற எழுத்தைக் கொண்டுதான் முதல் பதம் தொடங்கப் பட்டுள்ளன. காரணம், சகல சப்தங்களுக்கும் காரணமாக இருப்பது 'அ'காரத்தின் இயல்பு.

ஆக, ப்ரணவத்தின் முதல் அக்ஷரமான 'அ'காரத்தின் பொருள் 'நாராயணன்' என்று கொளல் வேண்டும்.

ப்ரணவத்தின் இரண்டாம் அக்ஷரமான 'உ'காரத்திற்கு 'பிரிநிலை' என்று அர்த்தம் கூறுவர். அதாவது, "ஸ்ரீமன் நாராயணன் ஒருவனையே தெய்வமாகக் கொள்வது".

"ஒண் தாமரைக் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு"

'உ'காரம் பெரிய பிராட்டியை - மஹாலக்ஷ்மியைக் கூறுகிறது என்றும் கூறுவர்.

ப்ரணவத்தின் மூன்றாம் அக்ஷரமான 'ம'காரமாவது ஜீவாத்மாவைச் சொல்கிறது. அதாவது "ஞானத்திற்குப் பற்றுக் கோடாகவும் ஞானமயமாகவும் இருக்கும் உயிர்கள் என்று பொருள் கூறப்பட்டுள்ளது".

ஆக, ஓம் எனும் ப்ரணவத்தால் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள சம்பந்தம் சொல்லப்பட்டுள்ளது.

திருமங்கையாழ்வாரின் "கண்ணபுரம் ஒன்று உடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனோ" என்கிற அருளிச்செயல் ப்ரணவ மந்திரத்திற்கு அர்த்தமாக விளங்குவதால் அந்தப் பாசுரத்தை ப்ரணவமாகவே அநுஸந்திக்கின்றனர் வைணவர்கள்.

<u>நமோ:</u> 'நம' என்பது 'ந' என்றும் 'ம' என்றும் இரண்டு பதங்களாகப் பிரிக்க வேண்டும்.

'ம' என்றால் 'தனக்கு உரியன்' என்றும் 'ந' என்பது அதை தவிர்க்கிறது என்றும் பொருள். அதாவது, எனக்கு நான் உரியேன் அல்லேன் என்று அர்த்தம். அகங்கார மமகாரங்களைத் தவிர்த்து, ஜீவாத்மா ஈச்வரனுக்காகவே என்பதால் "தனக்கே ஆக எனைக் கொள்ள வேணும்" என்று பிரார்த்தித்துக் கிடக்க வேண்டும்.

<u>நாராயண:</u> 'நாராயணன்' என்பது 'நாரங்களுக்கு அயனம்' அதாவது எல்லா நித்ய வஸ்துக்களின் மொத்த கூட்டமே 'நாரம்' எனப்படும்.

'அயனம்' என்பது 'இருப்பிடம்'

அதாவது எல்லா நிலைத்த பொருள்களுக்கும் இருப்பிடமானவன் நாராயணன் என்பதாகும்.

ஆய: 'ஆய' என்ற பதத்திற்கு எல்லா விதமான அடிமைகளும் (தொண்டுகளும்) செய்ய வேணும் என்று அர்த்தம். **

"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையா மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு
மணையாம் திருமாற்கு அரவு"

என்ற பொய்கையாழ்வார் பாசுரப்படியே, திருவனந்தாழ்வானைப்(ஆதிசேஷனைப்) போல, எல்லா கைங்கர்யங்களையும் செய்ய வேணும் என்கிற விருப்பம் ப்ரார்த்தனையாக வெளியிடப்படுகிறது.

இந்த பகவத் கைங்கர்யமானது, "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்" என்கிற ஆழ்வார் பாசுரப்படி எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் எல்லா நிலைகளிலும் செய்யக் கடவது.

பகவத் கைங்கர்யத்தின் எல்லை நிலம் பாகவத கைங்கர்யம் என்பதை அறிந்து பாகவதப் பெருமக்களுக்குத் தொண்டு செய்ய வேணும்.

ஆக, திருமந்திரம் என்கிற இந்த மஹா மந்திரத்தால் நாம் அறிந்து கொள்வது யாதெனில்,

எம்பெருமானுக்கே உரியவனான அடியேன் எனக்கு உரியவனல்லன் என்பதை அறிந்து, சர்வஸேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் (கைங்கர்யங் களும்) செய்யப் பெறுவேனாக வேணும் என்று ப்ரார்த்திப்பதே.

★ ★ ★

2(11)

சேர்த்தட தென்குருகூர்ச்சடகோபன் சொல்

சீர்த்தொடையாயிரத்து ஓர்த்தவிப்பத்தே

விடுக; பற்றுக, பயன் அடைக

தடாகங்கள் சேர்ந்திருக்கிற அழகிய திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீசடகோபன் இறைவனுடைய மிக்க புகழைத் தொடுத்து அருளிச் செய்த ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப்பத்துத் திருப்பாசுரங்களும் ஆராய்ந்து செய்யப் பட்டவை.

திருமந்திரத்தின் பொருளை ஆசார்யரிடமோ, சிறந்த வித்வானிடமோ க்ரந்த காலக்ஷேபம் கேட்டு முறையாகக் கற்றுத் தெளிவது அவசியம். ஸ்ரீபிள்ளைலோகாச்சார்யார் அருளிய "முமுக்ஷுப்படி" யே ஆதாரம்)

முதல் பாட்டில், எம்பெருமான் தவிர ஏனைய பொருளை விட்டுவிட்டு, உங்கள் ஆத்துமாவை (உயிரை) அவனிடம் சமர்ப்பிக்க (அளிக்க) இசையுங்கள் என்றார்.

இரண்டாம் பாட்டில்: ஏனைய பொருள்களை எப்படி விடுவது? அவைகளில் உள்ள வேகமாக அழியும் தன்மையினை உணர்ந்தால் விடலாம் என்றார்

மூன்றாம் பாட்டில்; 'நான் என்னுடையது' என்ற செருக்கை விட்டால், இறைவனை அடையலாம் என்று சுருங்கச் சொன்னார்.

நான்காம் பாட்டில்; பற்றப்படும் பொருளாகிய இறைவனின் தன்மையை அருளினார்.

ஐந்தாம் பாட்டில்; இறைவனைப் பற்றும் போது ஏற்படும் தடைகளை நீக்கும் வழியை அருளினார்

ஆறாம் பாட்டில்; இறைவன் அன்பே உருவானவன் என்றார்.

ஏழாம் பாட்டில்; இறைவனுக்கும், உயிருக்கும் உள்ள சம்பந்தம் என்ன? என்னும் அறிவு இருந்தால் அவனுடன் பொருந்தலாம் என்று விளக்கினார்.

எட்டாம் பாட்டில்; வேறு உபகரணங்கள் வேண்டாம். அவன் தந்த உறுப்புகளை அவனுக்கே ஆக்கினால் போதும் என்று அறிவுறுத்தினார்.

ஒன்பதாம் பாட்டில்; அப்படிச் செய்தால், வழிபாட்டுக்குத் தடையாக உள்ளவை தாமாக நீங்கும் என்றார்.

பத்தாம் பாட்டில்; வழிபாட்டுக்குப் பற்றுக் கோடான மந்திரம் இன்னது என்று அருளினார்.

முடிவில்; இந்தத் திருப்பாசுரங்கள் ஏதோ வாய்க்கு வந்தபடி கொட்டியவை அல்ல; எல்லோருடைய நன்மைக்குத் தகுந்தவைகளை ஆராய்ந்து சொல்லப் பட்டவை என்றார்.

அதாவது, நம்பத்தகுந்தவரில் மிக உயர்ந்தவர் 'ஆப்ததமரானவர்' சொன்ன வார்த்தை.

- ஓர்த்த இப்பத்தே; ஆயிரம் பாசுரங்களில் இப்பத்து, சேதனர் எனப்படும் அறிவு ஜீவிகளுக்கு, அதாவது எல்லா மனிதர்களுக்கும் நன்மை எது? என்று ஆராய்ந்து நிருபித்துச் சொல்லப்பட்டவை. ஆகையால் எப்பொதும் ஓதப்படுவது.

இப்பத்துப் பாசுரங்களையும், ஈடு என்னும் அற்புதமான வியாக்யானத்தையும் சேர்த்து கற்றுத் தெளிந்து, பாடிஅனுபவியுங்கள்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

முடிவுரை

இறைவன் ஸ்ரீமந் நாராயணனின் ஒப்புயர்வற்ற மேன்மை,

அவன் திருவடிகளைச் சேர உபாயம், அவனை நினைப்பதற்கும், வேண்டுவதற்கும் ஏற்ற திருமந்திரம்,

திருமந்திரத்தின் பொருள், ஆகியவை, எம்பெருமானைக் காண அறிய வேண்டிய, கடக்க வேண்டிய முதற் படிகள்.

நிதானமாகவும், அழுத்தமாக்வும், ஆழமாகவும் கற்றுத் தெளிந்து, நெஞ்சு உறுதியும், வைராக்யமும் பெற்றுப் பின்னர் ஆழ்வாரின் வழியில், சரணாகதிப் பாதையில் பிரயாணத்தைத் தொடர்வோம்; மகிழ்வும், உற்சாகமும் மனதில் நிறைந்து ஆழ்வாரின் சொல்லமுதப் படிக்கட்டுகளை அனுபவித்தவாறே கடந்து செல்வோம்.

★ ★ ★

ஸ்ரீ வேங்கடகருஷ்ணன் - திருவல்லிக்கேணி